224851

தமிழ்ப்பொழில்

JL
031M 211, N30
N31
224851

85

தமிழ்ப் பொழில்

துணர் உ௬—மலர் ௯

985
4-50

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 DEC 1950
MADRAS

திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௧

விகிருதி—மார்கழி

(1950, டிசம்பர்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

தமிழ்ப் பொழில்.

உள்ளுறை.

திருவள்ளுவர் ஆண்டு 1981.

துணர் உகூ விகிருதி—மார்கழி மலர் கூ

1950, திசம்பர்

1. மதிப்புரை 273
2. துயரம் 274
   பொழிற்றொண்டர்
3. மதிப்புரை 275
   திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை
4. வெற்றிலை வாணிகர் 279
   வித்துவான்,
   திரு. ஔவை. துரைசாமி பிள்ளை,
   அண்ணாமலைநகர்
5. ஊழ் வினையும் உள் வலியும் 281
   திரு. அ. பழனியப்பன், சென்னை
6. கருங்கூத்து 287
   வித்துவான் திரு. சி. மணிவாசகன், மன்னார்குடி
7. ஆங்காங்கே (5) 289
   திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை
8. ஷெல்லி 295
   திரு. வேலூர்க் காரமுகன்
9. பிரிவு, வேண்டுகோள். (உள் அட்டை)
   பொழிற்றொண்டர்

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21 ஆம் நாளே குறைந்த அஞ்சற் செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்டினில் அனுப்பும்படி வேண்டுவோர் முழு அஞ்சற்றொகையையும் ஏற்றுக்கொள்ளல்வேண்டும்.

Edited and Published by A. Ganapati, Karanthai Tamil Sangam, Tanjore.
Printed by A. Ganapati, at the Co-operative Press, Tanjore, Limited,

224851

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உகூ	திருவள்ளுவர் யாண்டு கககூக விகிருதி—மார்கழி 1950—திசம்பர்	மலர் கூ

மதிப்புரை

1, 2. தொல்காப்பியம்—பொருளதிகாரம்—தொகுதி க. பகுதி 1, 2.
திரு. E. S. வரதராசையர் அவர்கள், B. A.

3. சைவசித்தாந்த தோற்றுவாயும், வரலாறும்
(Introduction and History of Saiva Siddhanta).

4. மரவழிபாடும் பாம்பு வழிபாடும்
(Tree Worship and Ophiolatry)
வித்துவான்
திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., B. L.,

மேற்குறித்த நான்கு நூல்களும் ஆங்கிலத்தில் எழுதப் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் அழகிய முறையில் வெளியிடப் பெற்றவை.

தொல்காப்பிய மூல நூல்களைப் படித்தறிய இயலாத ஆங்கிலப் படிப்பாளர் பொருளதிகாரக் கருத்துக்களை நன்கு அறிந்து கொள்ளக் கூடிய முறையில் திரு E. S. வரதராசையர் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். இவர்கள் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது.

தமிழிலக்கிய வளங்களை மேனாட்டாரும் அறிந்து மகிழ்வதற்கு வாய்ப்பு அளித்த சிறப்பு திரு. வரதராசையருக்கு உரியதாகும்.

● ● ● ●

திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அருட்டிரு. காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் நினைவாக ஏற்படுத்திய அறநிலையச் சார்பில் 1947, பிப்பிரவரியில் காசி இந்து பல்கலைக் கழகத்திலும், பிரயாகைப் பல்கலைக் கழகத்திலும் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிட்டதே மேற்குறித்த மூன்றாவது நூலாகும். திரு. பிள்ளை யவர்களது ஆராய்ச்சியும், சைவ சித்தாந்தத் தெளிவும் இந்நூலிலிருந்து வெளியாகும்.

தமிழர்களது மரவழிபாடு பாம்பு வழிபாடுகளின் கருத்தும், பயனும், சிறப்பும், திரு. பிள்ளை யவர்களின் ஆராய்ச்சித் திறனும், அவர்கள் எழுதிய இன்னொரு நூலிலிருந்து தெளிவாகும்.

துயரம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து ஆறாவது பட்டத்திலிருந்த அருட்டிரு. சிவசண்முக சத்தியஞான சிவாச்சாரிய சுவாமிகள் 1950, திசம்பர், 14 ஆம் நாள் இரவு சமாதியுற்றார்கள்.

ஐந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த உலகப் புகழ் பெற்ற அடிகளாார்க்குப் பிறகு அவர்கள் வகுத்த வழியில் பொருள் நிலைக்கேற்ப இவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வந்தார்கள். இவர்கள் பிரிவு பெரிதும் வருந்தத் தக்கதாகும்.

• • • • •

இந்திய குடியாட்சித் துணை முதலமைச்சர் திரு. சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 1950, திசம்பர், 15 ஆம் நாள் காலை 9–30 மணியளவில் இவ்வுலக வாழ்வு நீத்த கொடுஞ்செய்தி நமக்குப் பெருந்துயரம் தருவதாயிற்று. இக்கொடுஞ்செய்தி தெரிந்ததும் இங்குள்ள கல்வி நிலையங்கள் எல்லாம் மூடப்பெற்றன.

224851

மதிப்புரை.

தெய்வத்திரு, சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகளின்
வெள்ளணி விழா நினைவு மலராகத்
தருமபுர ஆதினத்தாரால் பதித்து வெளியிடப்பெற்ற
" திருக்குறள் - உரை வளம் - அறத்துப்பால் "
என்னும்
நூலிற்கு ஒரு மதிப்புரை.

இந் நூலில், வழ வழப்பும், தடிப்பும், வெண்மையுமுள்ள நல்ல தாளில், பெரிய எழுத்துக்களில், திருக்குறள், அறத்துப்பால் 38 அதிகாரங்களும் 510 பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

திருக்குறட்கு உரை ஆசிரியர் பதின்பர் என்பர். இவர்களுள், பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பழைய உரை எழுதிய ஆசிரியர், நுண் பொருள் மாலை ஆசிரியராகிய காரிரத்ன கவிராயர், இராமாநுசக் கவிராயர் இவர்களின் வரலாறு (தெரிந்தவரையில்) கொடுக்கப்பட்டிருக்கிறது. உவமைகளின் ஆராய்ச்சியும், இப்பதிப்பில் எடுத்துக் காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதியும் முன் இணையாக உள்ளன. குறள்களின் முதற்குறிப் பகராதியும், சொல்லகராதியும் பின் இணையாக உள்ளன.

இவ்வாதீனத்தார், நீதிநெறி விளக்கத்தைப் பலர் உரைகளுடனும், இலக்கண நுட்பங்களுடனும் பதிப்பித்து வெளியிட்டதைப் படித்தபொழுது, இதுபோல் மற்றை நூல்களையும் இவ்வாதீனத்தார் வெளியிடுவரோ என ஏங்கினேன். இவ் வேக்கத்தை மாற்றுவதற்காகவோ திருக்குறளை வெளியிட்டார் என இந்நூலைப் படித்துப் பெரும் பயனும் மகிழ்வும் எய்தினேன்.

(1) ஒவ்வொரு அதிகாரத் தலைப்பிற்குப் பொருளும், அவ்வதிகார வைப்பு முறைக்குப் பலர் கூறிய காரணங்களும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

(2) குறள் வெண்பா பெரிய எழுத்தில் உள்ளது.

(3) உரைப்பகுதி :—இப்பகுதியில், பரிமேலழகர் உரையும், விளக்கமும் விரிவாகவும், மணக்குடவர், பழைய உரை ஆசிரியர், பரிதியர், காலிங்கர், முதலியோரின் கருத்துரைகளும் காட்டப்பட்டிருக்கின்றன.

(4) உரை விளக்கப்பகுதி :—இதில், நுண்பொருள் மாலை ஆசிரியர், இராமாநுசக்கவிராயர் எழுதிய உரை விளக்கங்கள் உள்ளன. நுண்பொருள் மாலை, பரிமேலழகரின் உரையை விளக்குவதாகும்.

(5) மேற்கோட் பகுதி :—பல இலக்கண ஆசிரியர்களும், இலக்கண உரை ஆசிரியர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை விளக்கிக் காட்டத் திருக்குறளிலிருந்து எடுத்தாண்ட விளக்கங்கள் உள்ளன.

(6) ஒப்புமைப் பகுதி :—ஒவ்வொரு திருக் குறளின் கருத்தை பலர், பல நூல்களில் எப்படி எடுத்தாண்டார் என்பதை விளக்க அந்தந்த நூலிலிருந்து (Quotations) எடுத்துக் காட்டு காட்டப்பட்டிருக்கிறது.

(7) இந்நூலின் பதிப்பாசிரியராகிய வித்துவான் திருவாளர் ச. தண்டபாணிதேசிகரின் கருத்துக்கள் பின் குறிப்பாகப் பக்கங்களின் அடிப்பகுதியில் சிறு எழுத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.

(8) வைப்பு முறை :—இதில் பல உரையாளர்கள் ஒவ்வொரு அதிகாரத்திலும் தழுவிய குறள் வைப்புமுறைகாட்டியுள்ளது.

இவ்வுரை ஆசிரியர்களில் கவி ராச பண்டிதர் குறள்களின் கருத்துக்களை ஆரிய மயமாக்கி யுள்ளார்.

மணக்குடவர் ஒருவரே வடமொழி மிகாத சிறந்த தமிழ் நடையில் உரை எழுதி யுள்ளார்.

கவி ராச பண்டிதரும் மற்றோரும் புகுத்துள்ள வடமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களையும் விளக்கங்களையும் பதிப்பாசிரியர் குறித்திருந்தால் தமிழனுக்கு குறள்களின் செம் பொருள் தெற்றென விளங்கும். தமிழ் நூலைத் தமிழனுக்குத் தமிழிலே விளக்கிக் காட்டவேண்டும் எனும் முறை தழுவத் தக்கது என்று நினைக்கிறேன்.

224851.

வேறுபட்ட கருத்துக்கள் :—

பதினைந்தாவது' குறட்பாவிலுள்ள 'கெடுப்பதூஉம்' என்பதற்கு 'பெய்யாது நின்று கெடுப்பதூஉம்' எனப் பொருள் கொண்டார் பரிமேலழகர். மழை மிகப் பெய்து கெடுப்பதும் உளதாகையால், இவர் இக் கருத்தை ஏன் விடுத்தனர் என்று திகைத்திருந்த எனக்கு, கவி ராச பண்டிதர் இக் கருத்தையும் ஏற்று விளக்கியுள்ளதைப் படித்து மகிழ்ந்தேன்.

23-ஆம் குறளில் 'இருமைவகை தெரிந்து' என்பதற்கு 'பிறப்பு வீடு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து' எனப் பலரும் பொருள் கொண்டுள்ளார். ஆனால் 'இருமை' என்பதற்கு (Duality) என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருளே தக்கதெனக் கொள்ளலாம். அதாவது, நன்மை-தீமை, அறம்-மறம், செல்வம்-வறுமை, ஒளி-இருள், இன்பம்-துன்பம், முதலியன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிவது.

புலவர்கள் ஆய்ந்தறிவார்களாக (இராம கிருட்டிண பரம அம்சர், ஒரு கையில் பொன்னும், ஒரு கையில் மண்ணும் ஏந்திக்கொண்டு, 'இது பொன், இது மண், இரண்டும் ஒன்று' என்பதாகப் பல தடவை சொல்லிக் கடைசியாக இரண்டும் ஒன்றென்று ஆற்றில் எறிந்து விடுவாராம். இதுவே இருமையின் ஒருமையை ஆராய்ந்தறிவது, இதுவே, இருமை வகை தெரிந்த நீத்தாரின் பெருமை.)

71-ஆம் குறளில் 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' எனபதில், தாழ் = பூட்டு என்னும் பொருள் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இராமாநுசக் கவிராயர் 'தாள்' என்பது சினையாகு பெயராய்த் தாளிடப்பட்டக் கதவின் மேனின்றது' என்று கூறியுள்ளார். எனவே, 'தாழ்' ஏற்றச் சொல்லா, அல்லது 'தாள்' ஏற்ற சொல்லா என்பது விளங்கவில்லை. 'தாள்' 'தாழ்' என மாறின தென்றால், இதற்கு இலக்கணம் கூறவில்லை. எனினும் 'தாள்' என்பதே ஏற்ற சொல். புலவர்கள் உன்னிப் பார்க்க. 75-ஆம் குறளின் பொருளில் இவ் வுலகத்து இல் வாழ்க்கைக் கண் நின்று இன்ப நுகர்ந்து அதன் மேல் துறக்கத்துச் சென்றெய்தும்

பேரின்பத்தினை' என வடவர் கருத்தைப் புகுத்துப் பொருள் ஏற்ற பரிமேலழகருக்கு மாறாக, 'வையத்து அனைத்துயிர்க்கும் பொருந்திய முறையினால் மிக அன்பு செய்த அதுவே, இன்புற்றனராய் வாழ்கின்றவர் எய்தும் செல்வச் சிறப்பு' என்று பொருள் கொண்டார் காளிங்கர்.

மேற் காட்டியது போல இந் நூலைப் படிப்போரின் பல கருத்துக்களை விளக்கிக் காட்டுவதற்கான தனிமைச் சிறப்புடைய பதிப்பு இது.

எல்லாருடைய உரைகளும் ஒருவருக்குக் கிடைக்குமேயானாலும், அவற்றை விரித்து வைத்து, கருத்துக்களை சீர்தூக்கிப் படித்துப் பொருள் ஏற்பது கடினம். ஆகையால் இப் பதிப்பு ஆராய்ச்சியாளருக்கும், விரிவுரையாளருக்கும் மிக்கப் பயன் படுவதாகும்.

மேலும், பல இலக்கண ஆசிரியர்களும், இலக்கண உரை ஆசிரியர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை விளக்கிக் காட்டத் திருக்குறள் அவர்களுக்குக் கலங்கரை விளக்காக இருக்கிறது என்பது இப் பதிப்பால் நன்கு விளங்குகிறது. தொல்காப்பியரின் பொருள் இலக்கணத்திற்கு உரையெழுதிய இளம் பூரணர் தம் கருத்தை விளக்க 50 நூல்களிலிருந்து 1400 மேற் கோள்கள் காட்டியுள்ளார். இம் மேற்கோள்களில் 200 திருக்குறளிலிருந்து ஏற்றவை. ஆகையால், மற்றவர்களுக்குத் திருக்குறள் கலங்கரை விளக்காக இருப்பது வியப்பல்ல. எனவே, இப் பதிப்பு, திருக்குறளைப் படிப்போருக்கும், பள்ளி ஆசிரியருக்கும், கல்லூரிக் கலைஞருக்கும் பெரும் பயனளிப்ப தென்பதற்கு ஐயமே இல்லை.

வேண்டுகோள் :—

திருக்குறளில் அறத்துப் பாலை இந்தச் சிறந்த முறையில் வெளியிட்ட ஆதீனத்தார் மற்ற இரு பால்களையும் இச் சிறப்புடன் வெளியிட்டுத் தமிழுக்கும், தமிழருக்கும் பேருதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

இக் கால ஆட்சிச் சுழலில் சிக்காது தருமபுர ஆதீனம் நீடூழி சீரும் சிறப்பும் கொண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வெற்றிலை வாணிகர்.

(வித்துவான் திரு. ஔவை. துரைசாமி பிள்ளை, அண்ணாமலை நகர்)

புதுக்கோட்டைப் பகுதியில் வெள்ளாறு ஓடுகிறது. அதன் இரு கரையிலும் உள்ள நாட்டுக்குக் கோனாடு என்று சங்க காலத்தில் பெயர் வழங்கிற்று. இடைக் காலத்தில் விசயாலயன் இராசராசன் முதலிய சோழ வேந்தர் தஞ்சையில் இருந்து ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில் முதல் இராசராசனது 18-ஆம் ஆண்டுக்குப் பின் இக் கோனாட்டுக்கு இரட்டபாடி கொண்ட சோழ வள நாடு என்று பெயர் உண்டாயிற்று. ஆனாலும் பழம் பெயரை மறவாதபடி, கோனாடான இரட்டபாடி கொண்ட சோழ வளநாடு என்றே அது கூறப்பட்டு வந்தது.

இந்த நாட்டில் அந்தக் காலத்தில் விளங்கிய பேரூர்களில் திருநலக் குன்றம் என்பது ஒன்று. இப்போது அது குடுமியான் மலை என்ற பெயருடன் நிலவுகிறது. இதனருகே காப்புக்குடி யென்பது ஓர் ஊர். அந்த நாளில் வாழ்ந்த வேந்தர்கள், நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்களுக்கு நீர் வளம் பொருந்திய ஊர்களைக் கொடுப்பது வழக்கம். அதற்குப் பிரமதாயம் என்று பெயர்; அது பிரமதேயம் என்றும் மருவி வழங்கும்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைக் கட்டிய இராசராச சோழனுக்குப் பின் அவன் வழியில் முதற் குலோத்துங்கன் என்னும் வேந்தன் ஆட்சி புரிந்தான். அவன் சுமார் 880 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1070 முதல் 1120 வரையில் ஆட்சி செய்தான். இந்தக் கோனாடான இரட்டபாடி கொண்ட சோழ வளநாடு அவனுடைய ஆட்சியில் இருந்தது. மேலும், அக் காலத்தில் நாட்டின் பரப்பைக் கணக்கெடுத்தவர், கோனாடு இருபத்து நான்கு வட்டகை பரப்புடைய தெனக் கணக்கிட்டனர்; இதை அப் பகுதியில் காணப்படும் கல் வெட்டுக்கள் உரைக்கின்றன.

இந்தக் கோனாட்டில் திருச்சிராப்பள்ளி வழியாகவும், தஞ்சை வழியாக்வும் வெற்றிலை வாணிகர் வந்து வியாபாரம்

செய்வர். மலைநாட்டிலிருந்து குதிரை வாணிகரும் வந்து குதிரை வியாபாரம் செய்தனர். தஞ்சை மாநாட்டு மன்னார்குடிக் கல்வெட்டால் மிளகு வாணிகரும் பிறரும் மலைநாட்டிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் வந்து போன செய்தி தெரிகிறது. இவர்களிற் பலர் விற்றற்குரிய பொருள்களைப் பெருந் தொகையாகக் கொணர்ந்து ஓரிடத்தே பண்டகசாலை நிறுவி அதன் கண் தொகுத்துச் சிறிது சிறிதாக ஊர்களுக்கு அனுப்பினர். இவர்களைப் போலவே இந் நாட்டு வணிகர்களில் பலர் வெளிநாடுகளிலிருந்து வாணிகப் பொருள்களை வருவிப்பதும், இந் நாட்டுப் பொருள்களை வெளிநாடுகட்குக் கொண்டு செல்வதும் உண்டு.

இவ்வாறு, வணிகரது போக்குவரவில். இடைச் சுரங்களில் ஆறலைகள்வரது குறும்பும் இருந்து வந்தது. அவற்றினின்றும் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய நிலை இவ் வணிகர்க்கு நேரிட்டது. அவர்களைக் காக்க வேண்டிய கடமை அந் நாளை அரசர்க் குண்டென்பதைச் சங்க நூல்களே கூறுகின்றன. 'அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக், கைப் பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக், கொடியோர் இன்றவன் கடியுடை வியன்புலம்' என்பதனால், வழிப்போக்கர்க்கு ஊறுண்டாகா வண்ணம் பழைய நாளைத் தமிழ் வேந்தர் காவல் புரிந்தமை விளங்குகிறது. என்றாலும், வணிகர் செல்லும்போதெல்லாம் அரசனது படையைக் கொண்டேகுவது வணிகர்க்குப் பல சமயங்களில் இடுக்கண் விளைத்தது. சில சமயங்களில் அரசியற் படையின் உதவி கிடைப்பது அரிதாகும். அதனால் வணிகர் தாமே படைகளை வைத்தாளும் உரிமை பெற்றுப் படையும் கொண்டிருந்தனர். இம் முறை அந் நாளில் மேனாடுகளிலும் இருந்தது. ஐரோப்பியர் நம் நாட்டில் வாணிகம் செய்ய வந்தபோது தமது செலவிலேயே படைகளை வைத்தாண்ட செய்தியை நம் நாட்டுச் சரித்திரமே கூறுகிறதல்லவா? பகை பெரிதானபோதே அரசர் முன் வந்து தாங்கள் பெரும் படை கொண்டு பகைவர் குறும்புகளை அடக்கினர்.

இந் நிலையில் இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டில் வணிகர் பலர் வாழ்ந்தனர். அவருள் வெளிநாட்டு

(307 ஆம் பக்கம் பார்க்க.)

ஊழ் வினையும் உள் வலியும்.

திரு. அ. பழநியப்பன், சென்னை.

இவ்வுலகியற்றியான் இசைந்துதவும் இயற்கைச் சக்தியின் இன்றியமையாத் துணையால் இயங்கும் மக்களனைவரும், ஒத்த உருவினராய், ஒத்த பண்பினராய், இன்ப துன்பமிரண்டினையும் ஒத்த அளவில் நுகர்பவர்களாய் அமையாமை கண்கூடு. எள்ளத்தனை ஒற்றுமையுமின்றிப் பல்வேறு கூறானும், பலதிறப்பட்ட மக்களாய்ப் பிரிந்து, ஏற்றத் தாழ்வுடன், சிறுமை பெருமையுற்று வாழ்தலைக் காணுந்தோறும், இயற்கையின் இன்னருளுக்கும் இடவேற்றுமையுண்டோவென ஐயுறத் தோன்றுகின்றது.

ஒருவன் செய்யும் நல்வினை தீவினைக்கேற்ப, இன்ப துன்பமிரண்டும் அவனை வந்தடைவ தியல்பு. நல்வினையாற்றி நலம் பல புரிவாரும், நலிந்து, நாடோறும் துன்புற்று வாழ்தலைக் காண்கிறோம். இஃது இயற்கையோடொப்பாமை தெளிவு. 'இப்பிறப்பில் அவன் நன்மையே செய்தொழுகினும், முற்பிறப்பில் தீவினையாற்றித் தீங்கிழைத்திருக்கிறான். அதன் விளைவை இப்பிறப்பில் துய்க்கிறான். அதை முன்னின்று முடிக்கிறது ஊழ். ஊழ் இறைவனின் இணையற்ற சக்தியின் திருவுருவம்' என்று கூறி ஏற்றம் தருவர் சைவசமய குரவர்.

மனத்திலே எப்போழ்தும் இருபெருஞ் சக்திகளுக்கிடையில் போர் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதிலொன்று நன்றாற்றத் தூண்டும். மற்றது அதைத் தடுத்துத் தீயவழிச் செலுத்தும் நல்லதனின்றும் அல்லதே மக்களைத் தன்வழி நடாத்திச் செல்லும் திறமை மிக்கது என்றாலும், அல்லதினின்றும் நல்லதே இறையருள் பெற்றி

லங்குவது. தீவினை நிகழ்த்தத் திட்டமளிப்பது ஊழ் என்றும், அஃது இறைவனின் அருளொடு ஒன்றிய தன்றென்றும், தானே தனித்து இயங்கும் ஒரு பெருஞ் சக்தி என்றும் கூறிப் பெருமை கொள்வார், வேறுபிற சமயத்தவர்.

ஊழ் எத்தன்மைத்து, எவ்விதமாக மக்களை இயக்குகிறது என்பதை விரித்து, ஒன்றிரண்டல்ல, பத்துப் பாட்டுக்களில், ஓர் அதிகாரமே ஆக்கியிருக்கிறார் திருவள்ளுவர் என்றால், அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டவும் வேண்டுமோ? 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்' என்னும் பாட்டின் கருத்தை உணர்ந்தால், ஊழ்வலியை வெல்ல வேறெவ்வலியாலுமியலா தென்பது தெற்றெனப் புலப்படும்.

மனிதன் அறிவுத் துணைகொண்டு ஆராய்ந்து ஆற்றும் செயல்கள் உரிய பலனைத் தந்தேதீரும். அதில் எதிர்பாராத தோல்வி கிட்டினால் அதற்குத் தக்க காரணங்க ளிருக்கும். 'வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியுந், துணைவலியுந் தூக்கிச் செயல்' வேண்டும். வினையாற்ற முனையுமுன் ஆய்ந்துணர வேண்டியவற்றில் ஏதாகினு மொன்றைப் பொருட்படுத்தாது தவறவிட்டு, அதன் பயனாய் இடைக்கண் முறிதலை, ஊழ் என்று கூறித்திரிதல் ஒவ்வாது. இன்னல் விளைய இடனளித்தது யாதென வினவி விடை தேடியடைய வேண்டும். தவற விட்டதைச் சிந்தித்து அறிந்தபின், மேலும் அத்தவறைச் செய்யாது, திருத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்பவன் சோர்வின்றி வேறுபல வினைகளாற்ற இயன்றவரை முயன்று அதில் வெற்றியும் பெறுவன். அஃதின்றி ஊழ்வினைப் பயனால் வந்துற்ற தென்றெண்ணி, ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால், சிந்தித்துணர நேரமில்லாது போய்விடும். எந்நேரமும் நிகழ்ந்தவற்றை எண்ணி எண்ணி ஏங்கி, உள்வலி இழந்து, ஊழ்வினையை நொந்து, துன்பப் படுவதிலேயே தன் வாழ்நாள் முழுமையும் கழிப்பான்.

செயல்புரிய இயலாமைக்கும், செய்த செயலின் குறைபாட்டிற்கும், தக்க காரணம் கண்டறிய முடியாதபோழ்து, மனிதன் தன் தவறையும், இயலாமையையும், ஒப்புக் கொள்ள மனமில்லாதவனாய், ஊழ்வலியைச் சரணடைகிறான். தன்னைச் சார்ந்தவர்களும் தன் இயலாமைக்கு உரிய காரணத்தை ஓர்ந்து உணர்த்துபவர்களாக அமையாததால், தான் முயன்று முடிக்காத அத்தனையும் ஊழ்வினைப் பயனே என்ற முடிவிற்கு வந்துவிடுகிறான். அம்முடிவு, அவன் ஆய்ந்துணரும் ஆற்றலைச் சிதைத்து, செயலாற்றவிடாது தடுத்து, பல்வேறு இன்னல்கட்கு மாளாக்கி விடுகிறது.

குறிப்பாக, வாணிபம் செய்யப் புகும் ஒருவன், அத்துறையில் பயிற்சி பெற்றாரை அணுகி, அவர்தம் அனுபவ உண்மைகளை அறிந்து, பொருளீட்ட முற்படவேண்டும். அவன் தன் சூழ்நிலைக்கேற்ற பொருள்களை நன்காராய்ந்து, பருவவிலை அறிந்து வாங்கி, விலை உயரக் காத்திருந்து, உரிய காலத்தில் விற்று, நல்ல ஊதியம்பெற முனைவது சிறந்த முறை. வாங்கப்பெற்ற பொருளின் விலை மேலும்மேலும் உயர்ந்துகொண்டே வந்து, அந்த அளவில் நிலைத்து நின்றுவிடாது, எதிர்பாராத முறையில், ஒரே நாளில் அதிகப்படியான அளவில் குறைந்து விடுதலுங் கூடும். இது வாணிபத் துறையின் அன்றாட நிகழ்ச்சிகளி லொன்று. விலைப்பருவம், கொண்ட முதலிற்கு குறைவான அளவிற்றாழ்ந்து வருதலைக்கண்டவுடனேயே, காலம் கடத்தாது விற்றுமுதல் செய்தால், ஒரு சிறு தொகையை பட்டும் இழந்தாயினும், பெரும் பகுதியை மீட்கலாம். அவ்விழப்புப் ஊழ்வலியால் வந்துற்றதென எண்ணினால், செயலாற்றிச் சிறக்க உதவும். ஆய்ந்தறிதல் தடைப்பட்டுவிடும். அச்சிறு தொகையை இழக்க நேர்ந்ததில் மனந் தளராது, அதற்குரிய காரணங்களைத் துருவித் துருவி ஆராய்ந்தறிவதிலேயே, தன் முழுக் கவனத்தையும் செலவிடவேண்டும்.

கொள்முதல் செய்யும் போழ்தே பருவ விலையை நன்கு விசாரித்தறியாது, கூடினவிலை கொடுத்து வாங்கிவிட்டோமா, அல்லது மக்களுக்கு இதுபோழ்து இன்றியமையாது வேண்டப்படும் பொருளைத் தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டோமா, அன்றி ஓர் அளவிற்கு அதிகமான ஊதியம் பெற அவாவி உரிய காலத்தை உணராது ஒதுக்கிவிட்டோமா, அல்லது அப்பொருள் வேறு பலவிடங்களிலிருந்து வந்து எண்ணற்று மலிந்துவிட்டதோ என்றெலாம் நினைத்துப்பார்க்க வேண்டும். இவைகளி லேதேனு மொன்று காரணமா யமையும். கருத்தின்றி விட்ட காரணத்தை அறிந்து, தன் தவறை உணர்ந்த ஒருவன், மேலும் அத்தவறைச் செய்யாது, செய்வினை அத்தனையும் திருந்தச் செய்தல் வேண்டும்.

ஊழ் எனும் சொல்லை விதி என்றழைப்ப துண்டு. ஊழ் மிகவும் வலிமை பெற்றது; அதன் செயலைத் தடுத்து நிறுத்த வேறெவ்வழியானு முயன்றாலும், தான் முன்னே வந்து நிற்கும் என்று கூறினேம். நாம் எதிர்பாராத விதத்தில் சிலர் நம் மனத்தானும் எண்ண முடியாத செயலைப் புரிந்து, ஏற்றமோ அன்றித் தாழ்வோ அடையும் போழ்து, அவர்க்கு உறுதுணையாக நின்றியக்குவது ஊழ் எனக் கொள்ளலாம்.

ஊழ் உருவற்ற ஒன்றாகையான், தன் வலிமையைப் பிறன் ஒருவன் வழியாகக் காட்டித் தன் விருப்பப்படி அவனை நடாத்துகிறது. எறும்பு முதல் மக்கள் ஈறாக அதன் செயலைத் தாங்கி அதற்கு உறுதுணையாய், உற்ற கருவியாக யமைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. மக்கள் எத்துணை உறுதிப்பாடுடையவர்களாக இருப்பினும், ஊழ் வலி மேலிட்டால், நெறி தவறி நடந்து, நிகழ்ந்த மறுகணமே தன் பிழையை உணர்கிறார்கள். அக்கண நேரத்திற்கு மனிதனின் நுண்ணிய அறிவையும் ஊழ் எனுந் திரை மறைத்துத்தான் விடுகிறது. அறிவாற்றல் மிக்காரும்

கூட, ஊழ்வலியை வென்று தம் உள்வலியை உயர்த்த இயலாது என்பது ஒரு தலை. அது மனிதசக்தியினின்றும் மேம்பட்டதே!

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித், தாழாது உஞற்று பவர்' என்ற குறளை 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தில் படிக்கும்போது, குறளிலும் முன்னுக்குப் பின் முரண்பாடுண்டோ என ஐயுறத் தோன்றும். அதன் கருத்தை ஆய்ந் துணர்வதினின்றும் ஆசான் உரை சொல்லக் கேட்டால் உண்மை விளக்க மறியலாம். முற்பிறப்பில் செய்த தீவினையின் சின்னமாய் அமைந்த ஊழ், இப் பிறப்பில் துயர் தருவதைத் தடுத்து நிறுத்தி, அதனை வெல்லவே முடியாது. இம்மையிலும் தீவினையாற்றி, ஊழை உண்டு பண்ணிக்கொண்டு, மறுமையிலும் துன்புற்று வாழும் வாய்ப்பைத் தேடிக் கொள்ளாது காக்கலாம். அதன் மூலம் இனிவரும் ஊழை வெல்லலாம் என்பதே அப் பாடலின் உட்புதைந்து கிடக்கும் உயரிய கருத்து. மறுமையில் ஊழ்வலி தம்மைப் பற்றி இடர் செய்யாது காக்க இம்மையில் இயன்றவரை முயல வேண்டுவது இன்றியமையாததாகும்.

ஒருவன் தனக்குத் துன்பம் வந்துற்றபோழ்து, அதற்குக் காரண காரியமா யமைந்தவற்றை அறிந்து அதன்பால் சீற்றங்கொண்டு பழிவாங்கும் நோக்கத்துடன், பற்பல தீச்செயல்களையும் ஆத்திரத்தில் அறியாது செய்துவிடுகிறான். அச்செயல், ஊழ் தன்னைப் பற்றி நின்று துன்புறுத்த இடனளிக்கும். உருவற்ற ஒன்றான ஊழ் ஒருவனைத் தன் கருவியாக்கிக் கொண்டு, பிறிதொருவனுக்குக் கேடு விளைவிக்கிற தென்ற உண்மையை உன்னி அறியும் தன்மை பெற்றால் துன்புறுத்தியவன் மாட்டும் இரக்கம் பிறப்பது, இயல்பா யமையும். குற்றமற்ற அவன் செயலை மன்னித்து, அவனை முன்னின்றியக்கிய ஊழை நினைத்து வருந்தி, அத் தீயூழ் தன்னை அணுகாது காக்க முயலு

வான். எய்தவனை விட்டு அம்பை நோவது அறிவுடைமை யாமோ?

கிருத்துவ சமயங் கண்ட ஏசுநாதர் இம்மைத் துன்பத்தை இன்பமென ஏற்று, மறுமையில் ஊழ் எனும் தீயசக்தி தன்னை யாட்கொள்ளாது காப்பான் வேண்டி, தன்னைச் சிறைசெய்து, தன் னுடலைச் சிதைத்து, முன்முடிச் சூட்டித் துன்புறுத்திய கயவர்கள்பால் ஒரு சிறிதும் வெகுளாது, அவர் தம் அறியாமையைக் கண்டு வருந்தி, அன்னார்க்கு நல்லறிவு நல்க, இறைவனை வழுத்தியமை சான்று.

'ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங் கண்ணோடிப், பொறுத்தாற்றும் பண்பே தலை' என்பது தமிழ்மறை. தம துயிரைப் போக்க முடிவுசெய்து, தம்மைநோக்கி எறி குண்டை வீசிய கொடியவன் மாட்டும் அன்புகொண்டு இரக்கங் காட்டி, 'அவனைத் துன்புறுத்தாது விட்டு விடுக' என்றுரைத்த நம் காந்தியடிகளின் ஒப்பற்ற பெருந்தன்மையும் மற்றொரு சான்று.

ஊழ்வலி, பிற வலிகளிலெல்லாம் தலையாயது என்று நன்கறியும் மக்களனைவரும், ஊழ் தம்மைப் பற்றாது தடுத்துக் காக்க வேண்டும் வகையெலாம் முயல வேண்டுவது அவசியம். இம்மை, மறுமை பற்றிய கருத்து வேற்றுமை கொண்ட அறிஞர்களுங்கூட, ஊழ் எனும் ஒன்றைக் குறித்துச் சிந்தித்தேயாகவேண்டும். ஊழை ஒரு பொருட்டாக எண்ணி, தீவினைக் கஞ்சி நடக்காவிடில் தீங்கிழைத்து மாறா உவகை கொள்வாரின் தொகை பெருகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஊழின் வலிமைக் கஞ்சி நடப்பவர்களிடம், பிறர் செய்யுந் தீவினையை மறந்து மன்னிக்கும் தன்மை தானாக வமைவதோடு, மற்றவர்பால் மனமிரங்கி அன்புகொண்டு இனிது வாழ இடமும் அளிக்கும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் ஊழ்வலிக் கஞ்சிப் பிறர்க்கு

கருங்கூத்து.

வித்துவான் திரு. சீ. மணிவாசகன் அவர்கள், தமிழாசிரியர்,
செயின்ட் சோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

கருங் கூத்தென்பது பெருங் கூத்திற் கிடையறவு தோன்றாதிருத்தற் பொருட்டும், காட்சி காண்போருள்ளக் கிளர்ச்சி குறையாதிருத்தற் பொருட்டும், கூத்தரங்குகளில் காண்பிக்கப்படும் சிற்சில காட்சிகளடங்கிய ஒரு சிறு கூத்தாகும்.

இக்கால மக்களனைவரும் கருங் கூத்தென்னும் தூய தனித் தமிழ்ச் சொல்லினை யொழித்து, (Comic) என்னும் ஆங்கில மொழிச் சொற்றுணை கொண்டு, அக்கூத்தின் பெயரை வழங்கி வருகின்றனர்.

ஆனால் இக்கருங் கூத்தியல் முறை தொன்றுதொட்டு இன்றுவரை பொன்றாது நின்று நிலவி, தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. தற்காலக் கூத்தரங்குகளிலும் பேசும் படக்காட்சிகளிலும் கருங்கூத்து இன்றியமையாத பேருறுப்பாகவும் விளங்கி வருகின்றது.

கருங்கூத்தென்னுஞ் சொற்கு நச்சினார்க்கினியர் தண்ணிய நாடகம் எனப் பொருள் விரித்துள்ளார். இவ்வுரைக்கோர் விளக்கம் எழுதிய இளவழகனார் காணக் கருத நகை விளைத்தலான் அவ்வாறு கூறினார் என்க, என மொழிந்துள்ளார்.

ஊறு செய்யாது, அன்புவழி நின்று, பெறற்கரும் பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்வானாக!

'இன்பம் இடரென்று இரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே!' 'திருமூலர்'

எனவே கருங்கூத்து கண்ணுகிய புறவுறுப்பாற் காணவும், கருத்திற்கு முதலான மனவுறுப்பால் நினைக்கவும் நகை விளைக்கவேண்டுமென்ருராயிற்று.

ஆதலின் இக்கருங் கூத்தியல் முறை தமிழ் மக்களால் தவிர்க்கமுடியாததும் பெரும் பயன் உள்ளதாகவும் கருதப் பட்டு வருகின்றது.

பெருங் கூத்திற்கு எட்டுச் சுவைகளும் முற்றப் பொருந்தி யிருத்தலே சிறப்பாயினும் கருங்கூத்திற்கு எண் சுவைகளில் முன் சுவையாகிய நகைச் சுவையே விஞ்சி நிற்றலின் பெரு நகைக் கூத்தென்னும் பெயர் கருங் கூத்திற்குச் சாலப்பொருந்துவதாயிற்று. கருங் கூத்திற்கு பெரு நகைக் கூத்தென்னும் பெயர் எற்ருல் பெறுதுமெனின், குறிஞ்சிக் கலியிறுதிப் பாட்டின்கண் ; முதுபார்ப்பான் வீழ்க்கைப் பெருங் கருங்கூத்து, 'ஊர்க்கெல்லாஞ் சாலும் பெருநகையல்கல் நிகழ்ந்ததொரு நிலையே' என்னுஞ் சொற்ருெடர் பற்ருகப் பெற்ரும்.

பெரு நகைக் கூத்தினலாய பெரும் பயனென்னை? பெரு நகை விளைத்தலொன்றே பயனெனின், அன்று, பெரு நகை விளைத்தலொன்றே பெரும் பயன் ஆகாமையின் என்க. மற்றென்னையோவெனின் கூறுவல்; முன்னர் கருங்கூத்து காணக்கருத நகை விளைக்க வேண்டுமெனக் கூறியவதனுன், மனிதவாழ்வு செம்மைப் பாடடைய இன்றியமையாது வேண்டப்படும் மனத்திற்கினிய நலத்தெளிவு கருங்கூத்துக் காட்சியால் உண்டாகுமென்றலின் பெரும் பயன் உண்டெனஅறிக.

எனவே கருங்கூத்து தனி மனிதன் நல்வாழ்வுக்கு வழியறிவிக்கும் ஓர் பெரும் பயன் சான்ற கலை யென்பது உறுதிப்படுகின்றது. தனி மனிதன் நல் வாழ்வே உலக மக்களின் நல்வாழ்வாகலின் உலக மக்களனைவருக்கும் கருங்கூத்து, பெரும்பயன் கெழுமிய கலையாகப் பயன் படுகின்றது. இக்கருங்கூத்தியல் முறை நாட்டிற்கு நாடு வேறு

ஆங்காங்கே. (5)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C.,

தொல்காப்பிய மரபியலில்,

'மூங்கா வெருகு எலி மூவரி அணிலொ
டாங் கவை நான்கும் குட்டிக் குரிய.'

என்பது போன்ற சில நூற்பாக்கள் குட்டிகளுக் குரிய தனிப் பெயர்களை விளக்கிக் காட்டுவன. இதுபோல் நம நாட்டில் சிறந்த பழங்களாகிய மா, பலா, வாழை இவைகளின் பிஞ்சுகளை, நிரல் நிரையே, 'மா வடு', 'பலா முசு', 'வாழைக் கச்சை' என்று குறிப்பிடுகிரும். எனவே, இவ்வழக்கு மரபியலில் சேர்ந்ததன்ருே! (மரபு-Usage.)

2. தமிழ்ச் சொல் இருக்கப் பிறமொழிச் சொல்லைப் பயன் படுத்தும் தமிழர்களுக்கு:

பட்டுத் தோன்றினும் கலை யமைப்பிலே ஒருமைப் பாடுடையதென்பது அறியக் கிடக்கின்ற உண்மை.

தற்போது தமிழ் நாட்டுப் பேசும் படக்காட்சிகளின் வழியாகக் கருங்கூத்துக் கலையினை சிறப்பித்து வரும் கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்களின் கலைத் தொண்டு தாழ்ந்த தமிழகத்தை உயர்ந்த தமிழகமாக்கும் என்பது ஒருதலை.

நிற்க பண்டைத்தமிழ் இலக்கியங்களில் ஒன்ருன கலித் தொகையின் கண் கருங்கூத்துக் கருத்தமைந்த பாடல்கள் நிறைந்துள்ளன, அவற்றைத் தற்காலக் கூத்தரங்குகளிலும் பேசும் படக்காட்சிகளிலும் நடிப்பிக்கச் செய்து பொதுமக்கள் அனைவரும் அறியும்படிச் செய்தல் தமிழ்ப்பெருமக்களின் கடமையாகும்.

தொல்காப்பியத்தின்கண் நகைச்சுவைக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட ஆரியர் கூறுந்தமிழும், குருடரும், முடவரும் செல்லுஞ் செலவும், சுற்றத்தாரை இகழ்ந்தவரும் குழவி கூறும் மழலையும் கருங்கூத்தின் பாற்படுவனவேயாம்.

(அ)

லம், மனை என்னும் பல சொற்களிருக்க house
,லலது கிரகம் என்று சொல்வானேன்!

தமிழன் வீட்டின் அமைப்பு எத்தன்மையது? தமிழன் வீடு மாந்தன் வடிவமுடையது! எப்படி?

(1) நம் முகத்தில் நீண்டு உயர்ந்திருக்கும் மூக்குப் போன்றது வீட்டின் மூக்கு—Λ.

(2) நம் முகத்தி லுள்ள வாய் போன்றது வீட்டின் வாயில் (இல் + வாய்-வாயில்).

(3) வாயின் மேற்புறத்தி லுள்ள கண்கள் போன்றன வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலு முள்ள மாடங்கள்.

(4) கண்களின் ஒளி போன்றன இம் மாடங்களி லுள்ள விளக்குகள்.

(5) வாயின் இரு பக்கங்களிலு முள்ள காதுகள் போன்றன வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலு முள்ள சாளரங்கள். (வீட்டின் முன்னிருந்து கூப்பிடும் ஓசை இச் சாளரங்களின் வழி உட்சென்று உள்ளிருப்பவர் காதுகளில் விழும்.)

(6) வாயிலின் மேலுள்ள பலகை நெற்றி போன்றது. நெற்றியில் சமயக் குறிகளை யிடுவது போல் வாயிலின் நெற்றியில் நாமம், சங்கு, சக்கரம், சங்கம் முதலியன செதுக்கப்பட்டிருக்கும்.

(7) இவ் வாயிலின்வழி உள் நுழைந்தால், ஒரு சிறு நடை யுண்டு. இது காற்றுக் குழலும், உணவுக் குழலு முள்ள கழுத்துப் போன்றது.

(8) இதைக் கடந்து உட் சென்றால் காற்றோடுவதற்கான திறந்த வாசல் உண்டு. இது நாம் காற்றை உட் கொண்டு வெளி உந்தும் நுரை ஈரல் உள்ள மார்பு போன்றது. (Thorax)

(9) இந்த வாசலின் நடுவி லுள்ளது துள
கடவுளை நினைக்கும் நெஞ்சு போன்றது. (துள
யேனும, இங்கு நின்று கடவுளை வேண்டுதல் உண்

(10) ஈரமுள்ளவர் நெஞ்சு போல், இந்த இடம் கோ—
கால இரவில் கொஞ்சம் குளிர்ந்திருக்கும்.

(11) இந்த மார்பைக் கடந்து சென்றால் அடுப்பங்கரை யுள்ளது. இது போன்றது நம் வயிறு. இவ் வயிற்றில் உணவும், வெப்பமும் உள்ளது விளக்கம்.

(12) இப் பகுதியின் பின்னுள்ள புழைக்கடை (கடை + புழை-புழைக்கடை) நம் வயிற்றின் கடையி லுள்ள கழி வாய்கள் போன்றது.

(13) நாம் நம் இரு கைகளையும் தோட்கள் வரை தூக்கினால் இடம் கூடும். இதுபோல் நம் வீட்டின் இருபக்கங்களிலும கைகளை (பனங் கைகளை)த் தூக்கித் தாள்வாரங்கள் கட்டினால் இடம் மிகுதிப்படும். (தாள் என்னும் சொல்லிற்கு ஒட்டு என்னும் பொருள் உள்ளது. எனவே, ஒட்டிச் சேர்ந்துள்ள இந்த இடத்தைத் 'தாள்வாரம' என்பது ஏற்றதே. மேலும், உடலில் தொகுக்கப்பட்டதே தோள். எனவே, ஒட்டப்பட்டு நீண்டுள்ள கைகளா லாகிய இடம் உடல் அமைப்பிற்கு ஒப்பிய தாகும்.)

(14) 'மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே' என்பதுபோல, இவ் வீட்டின் நிலையும், அதில் வாழும் மக்களின் நிலையும ஒத்துக் காணப்படுகின்றது.

(15) நம்மை நாளும் துப்புரவு செய்வதுபோல், நம் வீட்டையும நாளும் துப்புரவு செய்யவேண்டும். நாம் ஆடை, அணி அணிந்து அழகு செய்து கொள்வது போல, நம் வீட்டையும் அழகு செய்து வாழ்வதற்காக நம் பண்டையோர் அமைத்துக் கொடுத்த இருக்கையின் பெயர் வீடு, இல்லம், மனை என்றிருக்க, அவுஸ் (House) அல்லது கிரகம் என்று சொல்லும் தமிழருக்குச் சனிக்கிரகம் பிடித்துக் கொண்டது போலும்!

(ஆ)

ன்னும் சொல்லிற்கு முதற்பொருள் அளவு.
ால் மலையாளத்தில் இன்றும் வழங்குகிறது.

இச்சொல் ஆங்கிலத்தி லுள்ள 'estimate' என்னும் சொல்லை ப்பியது. மதி, மதிப்பு, மதித்தல், மதிப்பவர் என்பது போல esteem, estimate, estimation, estimator என்னும் ஆங்கிலச் சொற்கள் உள்ளன.

(2) ஞாயிறு ஒரு நாளின் அளவைக் காட்டுவது (நான் + இறு-ஞாயிறு)

(3) ஆனல் மதியோ உவா (new moon) நாளிலிருந்து தான் நாளுக்கு நாள் வளர்ந்து நிறைமதியாகி, பின் நாளுக்கு நாள் தேய்ந்து முற்றும் மறைந்து முப்பது நாட்களை அளக்கும காள் ஆயிற்று. இவ்வாறு மதியால் அளவிடப்படும் காலத் திற்குத் திங்கள் எனவும், அளவிடும கோளைத் திங்கள் எனவும் சொல்லுகிறோம்.

(4) மதி வளரும் காலத்தை வளர்பிறை எனவும், (பிறை= பிற)-நிறை மதிக்குப் பின் தேயும் காலத்தைத் தேய்பிறை யெனவும் குறிப்பிடுகிறோம். இக் காலங்களில் மதியானது மாலைக்கு முன் தோன்றின் முன் நிலா எனவும், மாலைக்குப் பின் தோன்றின் பின் நிலா எனவும், குறிக்கிறோம். இவ்வாறு மெய்ம்மை நிகழ்ச்சிக்கும் அறிவிற்கும் ஏற்ற சொற்களை விடுத் துச் சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் என்னும் சொற்களைப் பயன்படுத்துவது ஏற்குமா ?

(5) சுக்கில பட்சம் என்றால் ஒளிப்பக்கம் எனவும், கிருஷ்ணபட்சம் என்றால் இருள்பக்கம எனவும் பொருள் படும். இது மெய்யோ? நிறை மதிக்கு முந்திய நாள் ஒரு அளவுடன் இருபத்தெட்டு நாழிகைகள் நிலா தோன்றுவது போலவே, நிறைமதிக்குப் பிந்திய நாளும அதே அளவுடன் இரு பத்தெட்டு நாழிகைகள் நிலாத் தோன்றும். இது போலவே, நிறை மதிக்கு முன்னும் பின்னும ஒத்த அளவில் ஒத்த நாழி

கைகள் நிலவு தோன்றும். மெய்ம்மை இதுவாக, நிறைமதிக்கு முந்திய காலத்தைச் சுக்கில பட்சம எனவும், பிந்திய காலத்தைக் கிருஷ்ண பட்சம எனவும குறிப்பிடுவது மெய்ம்மைக்கும அறி விற்கும மாறானதன்றோ? எனவே, 'பிற மொழி பெரு மொழி' என்னும பேதைமை நீங்கித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்து மாறு வேண்டுகிறேன்.

II

தமிழி லுள்ள சொற்றொடர்களில் (phrases) இரண்டிற்கு விளக்கம்.

1. இடக்கர் அடக்கல் ஒன்றுக்கு இரண்டிற்கு—'ஒன்றுக்கு' என்பது நீர் பிரிவதை மாத்திரம் குறிக்கும 'இரண்டிற்கு' என்பது எருவும நீரும் பிரிவதைக் குறிக்கும். தனியாக நீரை விடலாம; ஆனல் எருவிடுங்கால் நீரும் பிரியும. ஆகையால், இயற்கையை ஒப்பி நீர் மட்டும பிரிவதை 'ஒன்றுக்கு' எனவும், எருவும் நீரும பிரிவதை 'இரண்டிற்கு' எனவும், தன்மான முள்ள பண்டைத் தமிழன் பெயரிட்டான.

2. 'தீட்டு, தொடக்கு': இதில் 'தீட்டு' என்பது தீண்டுவ தால் உண்டாவது. 'தொடக்கு' என்பது தீண்டுதலில்லாமல் தொடர்பினல் உண்டாவது. தந்தையோ, தாயோ இறந்தால் அதுபொழுது அருகேயில்லாமல் பல காதங்களுக் கப்பால் உள்ள மக்கட்கும 'தொடக்கு' உண்டு. எனவே, எங்களுக்கும், அவர்களுக்கும தீட்டு, தொடக்கு இல்லை யென்றால், எங்களிருவர் களுக்கும ஒரு வகையிலும பற்றில்லை என்பது பொருள். தமிழன் பண்பே பண்பு!

III

நம நாட்டில் வழங்கும சொற்களில் பல தமிழ்ப் பண்பிற்கு ஏற்காதவை இரண்டு.

1. ஈருருளி (Bicycle)

இந்த ஈர் உருளை உள்ள வண்டி மேல் நாட்டில் தோன்றிய பொழுது, அந் நாட்டில நான்கு உருளை வண்டிகளே மிகுதியா

யிருந்தன. அவைகட்கு நான்குருளை வண்டி (four wheelers) என்னும் பெயர் வழங்கியது. எனவே, புதிதாக அமைக்கப்பட்ட இரண்டுருளை வண்டிக்கு 'பை சைக்கில்' (bicycle) என்று பெயர் கொடுத்தனர்.

நம் நாட்டிலோ, இந்தப் புதிய வண்டி (bicycle) வந்த பொழுது, இரண்டுருளை வண்டிகளே மிகுதி. நான்குருளை வண்டிகள் இருந்தன. ஆனால், அவைகள் மேல் நாட்டார் வண்டிகளைப் போலவே அமைக்கப்பட்டு, அவைகளுக்குப் பீட்டன், கோச், லாண்டோ முதலிய ஆங்கிலப் பெயர்களே வழங்கி வந்தன. இந்த பை சைக்கில் இந் நாடு வந்தபொழுது யாரோ ஒருவன் 'துவிச்சக்கரம்' என்றான். அச் சொல்லை 'ஈருருளி' என்று தமிழப் படுத்தினான் மற்றொருவன். ஈருருளைகள் உள்ள வண்டிகளே மிகுதி உள்ள தமிழ் நாட்டில் 'ஈருருளி' என்னும் சொல் ஏற்காது!

மாடு பூட்டியிருக்கும் வண்டியை மாட்டுவண்டி எனவும், குதிரை பூட்டிய வண்டியைக் குதிரைவண்டி எனவும், கையால் இழுக்கும் வண்டியைக் கைவண்டி யெனவும், பின்னின்று தள்ளும் வண்டியைத் தள்ளுவண்டி எனவும், பிள்ளை நடை பழகும் வண்டியை நடைவண்டி எனவும் பெயரிட்ட தமிழ்ப்போக்கிற்கு ஏற்க பைசைக்கிளை 'மிதிவண்டி' (காலால மிதித்துச் செலுத்துவதால்) எனப் பெயரிடுவது ஏற்றது. சீனர்கள் இந்த வண்டிக்கு 'கியோக்' தப்சா, (காலால் உதைக்கும் வண்டி) எனவே பெயரிட்டிருக்கிறார்கள்.

2. வடமொழிகலந்த இச்சொல்லை 'அகரவரிசை' என அறியாத் தமிழன் பெயரிட்டனன் போலும.

அட்டவணைகளும், பெயரேடுகளும், மற்றும் அகரவரிசையில் எழுதப்படுவனவே; சொற்களையோ, பெயர்களையோ எளிதில் தேடிப்பார்ப்பதற்கே அகரவரிசையில் எழுதுவது. ஆகையால், இச் சொல் அகராதி என்னும் நூலின் உட்கருத்தை நன்கு விளக்கும் சொல்லன்று.

ஷெல்லி.

திரு. வேலூர்க் காரமுகன்.

அவனியை அருங் கவிகளால் அழகுற வைத்த அருங் கவிகள் அரும்புகையில் எதிர் காலம ஏமமுறப் பல்லாண்டுகள் பாரில் வாழ்வரென்ற உயரிய நம்பிக்கையாம் பேரொளியுடன் கவிமணி முடிதாங்கிச் செயற்கரிய செழுமைச் செய்யுள்கள் வனைந்து, முழுமதி யென மாண்புடன் மிளிர்ந்து சின்னாளிருந்து சிதைந் தொழிந்து குவலயத்தை என்றும் துன்ப ஆழியில் மூழ்க வைத்தவர்களுள் ஆங்கில அருங் கவி ஷெல்லியும் ஒருவரே. 36ஆம் வயதிலே பெருங்கவி பைரன் பாரை விட்டகன்றார்;

ஆங்கிலத்தில்,

Lexicon= A vocabulary or book containing an alphabetical arrangement of the words in a language or a considerable number of them with the DEFINITION of each.

Dictionary—A book containing the words of a language, usually arranged alphabetically, with EXPLANATIONS OF THEIR MEANINGS.

மேலே காட்டிய இரண்டு ஆங்கிலச் சொற்களின் பொருள்கள் கொண்ட சொல்லை அமைப்பதே தக்கது.

இத்தகைய சொல்— சொல் விளக்கம். விளக்கம் என்னும் சொல்லிற்கு வேர்ச்சொல் 'விள்'. விள்=திறத்தல், பிரித்தல். எனவே, சொற்களைத் திறந்து பிரித்துக் காட்டுவதால் உட்பொருள் நன்கு தெரியும். இக் கருத்தை ஏற்றே 'நீதி நெறி விளக்கம்' என்னும் பெயருள்ள ஒரு நூல் தமிழில் உள்ளது. ஆகையால் 'சொல் விளக்கம்' என்பதே தற்காலம். 'அகராதி' என்னும பெயருடன் வழங்கும் நூலிற்கு ஏற்ற பெயராகும்.

தமிழ் வாழ்க.

25ஆம் வயதிலே கனிவுறுங் கவி கீட்சு குவலயத்தினின் றகன்றார்; 30ஆம் வயதிலே சிறந்த கவி ஷெல்லி விபத்தால் உலகை விட்டொழிந்தார். ஒரே காலத்திய முப் பெருங் கவிகள் ஒருவர் பின் ஒருவராய் ஓடி ஒளிந்தமை இறைவனின் திருவுளமோ அன்றி அவனி எய்திய சாபமோ!

1792, ஆகஸ்டுட் 4ஆம் நாளை என்றும் நினைக்கவல்ல இனிய இயல்பை அரிய ஆங்கில இலக்கியம் பெற்றமை, சால்புடைய ஷெல்லி கவி மணி முடிதாங்கி—கலைக்கோ வேந்தி—இயற்கை ஒளியுடன்—புரட்சிக் குரலுடன்—சிந்தனை விதத்துடன்—சீர் திருத்தக் கொள்கையுடன்—உருகிப் பெருகி உளங் குளிர வைக்கும் இசையுடன் இலங்கியமையா லன்றோ!

இயற்கையி லிரண்டறக் கலந்து, இவர் வுள்ளமும் இயற்கையும் ஒன்றி, உணர்ச்சி பெற்று, துன்ப உச்சியிலே பல காட்சிகள் கண்டு, கவலைக் கடலில் மூழ்கி மூழ்கி, இன்னற் கரை எய்தி இடியுண்டமையால் வாழ்வியலை இவர் உணர்ந்ததைப் போன்று இவர் காலத்திருந்த எவரும் உணர்ந்தார்களில்லை. இளம வயதில் பள்ளியில் மாணவனா யிருக்கையில் பரிதியும், மதியும விண்மீன்களும் இலங்கும் நீல நிற வானத்தில் இவர் தம் சிந்தையை ஒன்ற வைத்து, அவண் ஏகும் மேகங்களைக் கண்டு, நனவு நிலையை மறந்து, கனவு நிலையில் திளைத்து, மகிழ்ந்ததுடன் பசும் புல் தரை மீதிருக்கையில் உறங்கிய உள்ளம விழிப்புற்று வையகம் மேகத்தால் கவரப்பட்டுள்ள தென்றும், தன்னையுமறியாமல் கண்ணீர் பெருக்கெடுத் தோடிற் றென்றும், பகைவர்களிடத்திருந்தும் கொடியோர்களிடத்திருந்தும் துன்பக் குரல் செவியுற்றதாகவும், பின்னர் இரு கைகளைக் கட்டி மெய்யறிவுடன்—நீதியுடன்—உரிமையுடன் இருப்பதாகத் தேர்ந்து நம்பிக்கை பெற்றுத் தனிமையிலிருக்க விழைந்ததை தன் நண்பனுக்குப் பதினென்றும் வயதிலேயே கவி பாடிப் பகர்ந்ததை எண்ணுங்கால், இவ் வவனி வாழ்வு இன்னலுடைத்தென்பதை இளமையிலேயே உணர்ந்து அவல வாழ்வின் ஆழத்தின் அடியை எழிலுடன் விளக்கிய சால்பு ஒன்றிற்கே வையகம் இவரைப் பாராட்டுகிறது. பள்ளிப் படிப்பில் பற்று கொள்ளாமல், இயற்கைச் சோலைகளையும், அழகிய மலர்ச் செடிகளையும்,

உயர்ந்து வளர்ந்த மரங்களையும், அருவிகளையும், குளங்களையும், பசுமைக் காட்சிகளையும் கண்டு மகிழ்ந்து மிக வுயர்ந்த பெரிய மணி நூல்களைப் படித் தின்புற்றுக் காலங் கழித்து வந்தார். கூரிய அறிவின் பிழம்பாக இவர் விளங்கியமையால் விநாடியில் பல வரிகளைப்படிக்கும் பேராற்றல் பெற்றதுடன், மேல் புலத்தை மேன்மையுற வைத்த யவன மொழியையும் லத்தீன் மொழியையும் நன்கு பயின்று, பின்னைய மொழியில் பாக்க ளியற்றும் சிறந்த புலமை எய்தி, மேல் நாட்டுக் கவிகளுக்கே தலையாய ஹோமரின் இலியட், ஓடிசி என்ற இலக்கியத்தைக் கற்றுத் தேர்ந்து தெளிந்து பீடுடை பிளாட்டோவின் கொள்கைகளை அலசி யறிந்து, சிந்தனை ஒளியால் பேருவகை எய்தி, ஒரு நாளில் 18 மணி நேரம் பல நூல்களைப் படித்தே காலங் கழித்துப்பள்ளிப் படிப்பில் கருத்து கொள்ளாது, கல்லூரிப் படிப்பில் ஊன்றி நிற்காது, 'நாத்திகத்தின் இன்றியமையாமை' என்ற கட்டுரையை வெளியிட்டமையால், கல்லூரியிலிருந்து வெளியேற்றப் பட்டார். உலகை இரு பகுதியாகப் பிரித்து, மன்னரும், மதவாதிகளும், செல்வவந்தர்களும் தீங்குடைய பகுதிக் குரியவர்களென்றும, நற்பொருளாளர்களும் (Philosoper), துன்பப்பட்டவர்களும், ஏழைகளும், நன்மையுடைய பகுதிக் குரியவர்களென்றும் கூறினார். மன்பதையின் இயற்கை உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துவது மனிதனால் அமைக்கப்பட்ட சட்டம் என்பது வெறும் புரட்டு அல்லது பித்தலாட்டம் என்றார். அழகிய பொருளை விழி காண்கையில் உள்ளத்தில் அழல் அரும்புவதால் காதலிப்பதும் காதலிக்காமலிருப்பதும் மனிதனுடைய ஆணையிலா இருக்கிறதென்று வினவுகிறார். காதலின் கனிவு உரிமை என்றும் அதை வரையறுத்துக் கட்டுப்படுத்தினால் உதிர்ந்து கருகிவிடு மென்றும் கூறுகிறார். அடக்கம, பொறுமை, பயம் இவைகளுக்குக் காதல் எதிர்மறை என்றியம்பித் திருமணம் என்பது சிறைக்கூடம் என்றார்.

பூதங்களையும், ஆவிகளையும் காண, காடு, மேடு, குகை, இடுகாடு முதலிய விடங்களிலெல்லாம் சென்று பார்த்தபொழுது ஒன்றையும் காணமல் பறவைகளின் குரலையும், மலர்ந்த மலர்களையும் கண்டாரே யன்றி வேறொன்றையும் கண்டாரில்லை, இவர்தம் இய்ற்கையின் அடிப்படையாகிய காதல் குடும்பத்தி

லரும்பி, நண்பர்களிடம் மலர்ந்து, தம்பால் காய்த்துச் சமூகத்திடை கனிந்து பழுத்தமையால், தம்பால் நம்பிக்கையும், கடமையில் நம்பிக்கையும், உலகை இயக்கும் காதலில் நம்பிக்கையும், மனிதன் முழு நன்மை யுறுவதில் நம்பிக்கையும், உயிர் யாண்டும் இருப்பதில் நம்பிக்கையும், இயற்கையிலுள்ள தெய்வீகத்தில் நம்பிக்கையும் கொண்டு, சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், விடுதலைக்கும், மாதர் உரிமைக்கும், மக்கள் உரிமைக்கும், பெரிதும் விழைந்து அரும்பாடு பட்டதுடன், மதம் மன்னராட்சிக்கு அடிகோலி மக்களை அடிமைப்படுத்தும் கொடுங் கருவி எனத் தேர்ந்து, மதத்தை எதிர்த்துக் கொடுமையை எதிர்த்துப் பெரும் புரட்சிக்காரராகப் பீடுடன் பிறங்கினார். இவரின் தனியுறிவு தகவுடன் திகழ்ந்ததைப் போன்றே சிறந்த ஒழுக்கச் சீலனாக ஒளிர்ந்தார்.

எச்சமயத்திற்கும் சிக்காமல் இயற்கையைப் பெரிதும் விரும்பி, எல்லாம் கடவுளாயிருத்தலால் கடவுள் என்ற ஒன்று தனியாக இல்லை என்ற இயற்கை வாதக் (அக்னொஸ்டிக்) கொள்கையை இறுகப்பற்றித் தீர்க்க முடியாதவைகளைத் தீர்க்கமுடியாதென்றும், தெரியாததைத் தெரிந்துகொள்ள முடியாதென்றும், ஒளி மறைவின்றி வெள்ளையாகத் துளக்கமற விளக்கிய உண்மைக்கும் இவர்தம் தனி யறிவின் தகவுக்கும் அறிஞர் உலகம் இவரைப் பாராட்டுகிறது. என்றாலும் மலைமீதிருந்து மணிமொழி மொழிந்து ஈரைந்து கற்பனைகளை இவ் வுலகிற் கீந்து சிலுவையில் சிதைந்த சிந்தனையாளர் இயேசுவையும் அவரின் அறநெறியையும் ஷெல்லி போற்றிப் புகழ்ந்து மதித்தாலும், இயேசுவின் பெயரால் பிறங்கிய கொள்கைகளையும் அதன் பேரில் நிறுவப்பெற்ற சமயத்தையும் மிகவும் வன்மையாகக் கண்டித்துச் சமுதாயம் சீர்பெற்று அறிவுத் துறையிலோங்கி விளக்கமுற்று நலமுறப் பெரிதும் பாடுபட்டதுடன், நோயால் நலமிழந்தவர்களுக்கு மருத்துவ வுதவி செய்து, பணமும், கொடுத்துக் காப்பாற்றியதுடன், நோயால் துன்புற்றவர்கள் மனு மூலம் தெரிவித்தால் அவர்களில்லம் போந்து விரைந்து ஆவன புரிந்து ஊக்கமூட்டியதுடன் தம்பணப்பையை என்றும் நோயாளிகளுக்குத் திறந்து வைத்திருந்ததுடன், எளியோர்களுக்கும் ஏழைகளுக்கும் நிரம்பப் பணவுதவி செய்து தம் நண்பர்கள் பட்ட கடன் எல்லாவற்றை

224851

யும் தீர்த்து ஏனையோரையும் ஏமமுற வைத்த உயர்வு இவருக்கன்றி எக் கவிகளுக்குமில்லை. எண்ணியதை எழுதி, எழுதியதைப்போல் நடை முறையில் வாழ்ந்து, வள்ளலைப் போல் பொருளை வாரி வழங்கி, வறுமை, நோய், கடன் முதலியவைகளால் சிக்குண்டவர்களுக்குப் புகலிடந் தந்து, ஏனையோரையும் ஏமமுற வைத்த மாண்பு ஷெல்லிக்கே உண்டு.

சிறந்த செல்வ வளம் நிறைந்த குடும்பத்தவராயினும், இவருக்கும் இவர் தந்தைக்கும் உடன்பாடில்லாமையால் குடும்பத்தைப் பிரிந்து தனித்திருந்தபொழுது, எழில் திகழும் விழியும், பொலிவுடை முகத்தோற்றமும், இனிய குரலும், நல்ல சாயலும், சிரித்த பண்பும் உருவாய் ஒளிர்ந்த எழிலுடைப் பூங்கோதை ஹேரியட் மீது காதல் கொண்டார். இவ் வணங்கு தாயிழந்து, தமக்கையுடனும், தந்தையுடனும், மிடியுண்ட, வாழ்வுக்கிரையானதுடன், பள்ளியிலும் பகரொனுக் கொடுமைக்கிரையாகி துன்புறுவதை, ஷெல்லியிடமறிவிக்கவே, ஷெல்லி மிகவும் இரங்கிக் கனிந்து துன்புற்றாலும், தம்முடைய இன்மை வாதக் கொள்கையை வற்புறுத்தி வந்தமைக்கு இவ் வணங்கு ஒன்றும கூறாது, இவர் மீது நிலைத்த பற்று கொண்டமையால் உரையாடலிலேயே இவர் காதல் வித்தை அவள் வுள்ளத்தில் தூவி அன்பு நீர் பாய்ச்சியதால், தற்கொலைக்குத் திட்டமிட்ட தாதையின் திட்டம் தவிடு பொடியானது போலும். ஹேரியட்டிற்கும் ஷெல்லிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து பெருகினும், ஷெல்லி ஏற்கனவே காதலித்த குரோவ் என்ற அணங்குமீது காதல் இல்லாமலில்லை. என்றாலும், ஹேரியட்டைக் காதலியாகக் கொண்டதும் இவருக்கும் இவர் குடும்பத்திற்கும் நட்பு ஏற்பட்டு ஆண்டுக்கு 200 பவுன்கள் பெறுவதாக உறுதி ஏற்பட்டதும், காதலியின் துயர் துடைக்கக் காதலி ஹேரியட்டுக்கு விடுத்த முடங்கலில் வாழ்வு நடாத்த 200 பவுன்கள் ஆண்டுக்குப் போதவில்லையானால் காதல் ஒன்றே போத வைக்கும் என்று ஷெல்லி வரைந்ததை எண்ணுங்கால், காதலியின் காதலுக்கு எவ்வளவு உயர்வு தந்தார் என்பதை உரைக்கவும் வேண்டுமோ!

இருவரும் வெளியூர் ஓடி உவகையுடன் வாழ்க்கையில் ஷெல்லி தம் காதலிக்கு லத்தின் மொழியையும் அதன் இலக்

கியத்தையும் கற்றுக் கொடுத்து இருவரும் இலக்கியம் பயின்று இன்புற்றனர். உரையாடுங்கால் அறமுறையில் நேர்மையுடன் நற்பொருள்களை முன்னிறுத்தி மன மொத்து பேசிப் பேருவகை எய்துவர்! இருவரும் கனிந்த காதலால் கட்டுண்டு கழி பேருவகை எய்தி இல்லத்தை மணி நூல்களால் நிரப்பி இருவரும் ஒருவராகி வாழ்ந்துவரினும், யாது காரணத்தாலோ இரண்டாண்டு கழிந்து மனம் அனலாகும் பிரிவு நிகழ்ந்ததை எண்ணுங்கால் மனம் நடுநடுங்கி உள்ளம் கலக்கமுறாம லிருக்காது.

ஷெல்லியின் முடங்கலைக் காண்கையில் பாவை பற்று கொண்டமையால்தான் பற்று கொண்டதாகவும், திருமணமென்பது பெருந் தொல்லை என்று கூறித் தாம் ஒரு திங்களாக இல்லத்தில் இல்லை என்றார், தனிமையிலிருந்தும், நண்பர்களிடமிருந்தும், நற்பொருள்களிடமிருந்தும் விலகியதாகவும், அவைகள் யாவும் மறைந்து வந்த அழல் வாழ்வைப் புதுப்பிப்பதாகவும், மரங்களும் நுண் பொருள்களும் அருவிகளும இவரை இழுக்கின்றன வென்றும் கூறியதை அறிகிறோம். ஹேரியட்டிற்கும் ஷெல்லிக்கும் உடன்பாடு கரைந்து எதிர்மறை அதிகரிக்கவே ஷெல்லி, மேரி என்ற மங்கைமீது காதல் கொண்டாலும், ஷெல்லிக்கு ஒருவித கலக்கம் ஏற்பட்டது. கடைசியில் இருவருக்கும் நிலைத்த பிரிவு ஏற்பட்டதால் சிறந்த ஷெல்லியின் வாழ்வு சிதைந்து மனம் பெரிதும் மங்கிற்று. அவலமும் கவலையும் தொல்லையும் ஷெல்லியைச் சூழ்ந்தன. ஹேரியட் மேஜர் ரையான் என்ற மாற்றான்மீது பற்று கொண்டு, 1818 இல் நீரில் மூழ்கி இன்னுயி ரிழந்தாள். பிரிவு ஏற்பட்ட பிறகு ஹேரியட் இறந்தாலும், ஷெல்லியின் உள்ளத்தில் ஆறாப் புண் ஏற்பட்டு இந் நிகழ்ச்சி அவர் மனதில் என்றும் புதுமையாகவே இருந்ததுடன், இவரின் கடைசிக் காலம் வரை ஹேரியட்டை எண்ணி எண்ணி உருகாம லில்லை. காதலித்த காரிகை கைவிட்டு அயலானிடம் தொடர்பு கொண்டிருந்தமை தெரிந்த பின்னரும் ஷெல்லி அக் காரிகையை மறவாம லிருந்தமை புலவரின் பெருந் தகைமையை விளக்குகிற தன்றோ! புறக்கணித்த பெட்ரேசை டாண்டே மதித்ததைப் போல் ஷெல்லியும் ஹேரியட்டை மதித்தார். மேரியுடன் ஷெல்லி நலமுடன் வாழ்ந்து, பிரான்ஸ், இடாலி முதலிய நாடுகள் சுற்றி இன்புடன் வாழ்ந்து பல பெருங் கவிகள் வனைந்தார்.

உலக வாழ்வில் ஊசலாடிய ஷெல்லி உலக இலக்கிய வானத்திலே இயற்கைக் கவியாக விரைந்து பறந்து நடனம் என்றும் ஆடும் உவமையில்லா உயர் பெருஞ் சிறப் பெய்தி இறவாப் புகழ் எய்தி யுள்ளார். அரிய ஆங்கில இலக்கிய அரங்கில் உளத்தை உருக்கும் பாக்கள் பாடிய முப் புலவர்கள் தாம் ஆங்கில மும்மணிக் கவிகள். விழி யிழந்த மில்டன் யாத்த லிசிடாசும், ஷெல்லி யாத்த அடோனியும், டெனிசன் யாத்த நினைவுப்பா (In Memorium) வும் உயர் பெரும் பாக்க ளென்பதில் ஐய மில்லை. உயரிய நடையில் கனிவுறுங் கருத்துக்களைக் கூறுகையில் படிப்போரின் எண்ணத்தையும், உணர்ச்சியையும், அறிவையும் கட்டுப்படுத்திப் பிரதிபலிக்க வைக்கும் பேராற்றல் பெற்றவர். எழில் நிறை அழற் குழலி இவர் உள்ளத்திலும் வெளியிலும் மகிழ்வுடன் கூத்தாடிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. இவர் யாத்த பாக்களின் பெரும் பகுதியில் கனிந்த உள்ளத்தின் குழைவும் எழிலும் பொலிவும் இனிமையும் இயற்கை ஒலியும் ஒளியும ஒளிர்தல் கண்கூடு. கவி யியலில் இவர் இலங்க வைத்த இன்ப வுயர்வைப் போன்று தம் வாழ்வியலில் விளங்க வைத்த உயரிய பண்பாட்டை உரைக்கையில் வையகமே இவருக்கு வணங்கும். ஹேரியட்டும் இவரும் இன்பக் காதலில் திளைத்து மகிழ்ந்திருக்கையில் ஹேரியட் அயலானை அடைந்து அகமகிழ்ந்து வாழ்ந்ததை யறிந்த ஷெல்லி பெரிதும் துன்புற்றாலும், ஹேரியட்டை விலக்கத் துணிந்தாலும் ஹேரியட்டிடம் மன முடைந்து உரையாடுகையில், 'நம்மிருவ்ரிடம் மலர்ந்த காதல் மலர் வாடினும் நட்பு மலர் மலர்ந்துளது' என்று உரைத்த உயர்வுக்கு உலகி லீடுண்டா? ஒழுக்கத்தாலும் அறிவியலாலும் உலகை உருவாக்க உயரிய ஒப்பற்ற பிராமிதஸ் அன்பௌண்ட் (Prometheus Unbound) என்ற நாடகத்தை நல்லுலகம் கண்டு நலமுறப் பெரிதும் உயரிய நோக்குடன் வரைந்ததில் வானுலகத் துன்பத்தை விளக்குகிறார்.

கனிவுறும் செய்யுளியலால் அலங்கரிக்கப் பெற்ற நான்கு அங்கங் கொண்ட நாடகத்தில் சிறந்த அறிவும் உயரிய ஒழுக்கமும் கொண்டு, பேராசை, பழிவாங்கல், தம் நலம் இவைகளை விட்டொழித்து, விண்ணுலக அடிமைகளின் தலைவராக விளங்கும் பிராமிதஸ் என்பவர் பனிக்கட்டிக ளிருக்கும் பனி மலையின்

உச்சியில் விலங்கிடப்பட்டுமன்றே கடவுளை எதிர்த்து விரியன் பாம்புகள் போன்ற விலங்குகளின் கொடிய துன்பத்திற்கும் இன்னலுக்கும் இரையாகிச் சிறிதும் வணங்காமல் உரமுடனும் உறுதியுடனும் விளங்கி நோய்தான் தமக்கு மூல மென்றும், எத்தகைய துன்பம் தொடர்ந்து பெருகி வரினும் அதைத் தளராது தகைக்க வேண்டுமென்றும், உண்மை, விடுதலை, காதல் இவைகள் தாம் தூய வாழ்விற்கு அடிகோலுகிறதென்றும், இதில் கடவுளாயினும், வேறு எவராயினும் தலையிடின் அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும், வன்மையாளர்களை எதிர்க்கும் எளியோர்களுடன் சார்ந்து கடவுளின் கொடுமை ஒழியும் வரை போரிட வேண்டுமென்றும், உள்ளத்தை இருளாக்கவும் தகைக்கவும் எவராலும் என்றும் முடியாதென்றும், ஆனால் துன்பத்தைத் தோற்றுவிக்கவே முடியுமென்றுரைத்துச் சிறிதும் பணியாமல் எதிர்க்கவே, குருவுக்கும் இவருக்கும் இணக்கம் ஏற்படுத்த டெமகார்கன் தலையிடவே பகைமை மறைந்து இணக்கம் நிலவவே இருள் இரிந்து, உரிமை ஒளிர்ந்து, அமைதி நிலவி, குடியரசு புன்முறுவல் செய்தது.

அறப் பண்புகளை முன்னிறுத்தி எளியோரின் நன்மைக்குப் பாடுபடின் உயரிய வெற்றிதான் பரிசு என்றாலும், தொல்லையும் துன்பமும் விட்டபாடில்லை என்றதுடன் அவலம் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் என்பதை உணர்த்தவே மேற்படி நாடகத்தை யாத்தார் போலும்.

திடுக்கிடும் கொடிய தீங்குடைய இருள் மலிந்த வெறுக்கத்தக்க பாத்திரங்களையும் போற்றிப் புகழ வல்ல நல்ல பண்பாடுடைய பாத்திரங்களையும் 'தி சென்சி' என்ற நாடகத்தில் திகழ வைக்கிறார். காமமும் கொடுமையும் அநீதியும் உருவாயமைந்த சென்சிக்கு இரு பீடு நிறைப் பண்பாடுடைய புதல்வர்களுண்டு; இவ்விரு புதல்வர்களைக் கொல்லக் கொடுமையே உருவான சென்சி திட்டமிடுகின்றான்; இது நிற்க, ஒழுக்கமும் அழகும் உருவாயமைந்த பெட்ரேஸ் என்ற மகள் உண்டு; மல்லி மலர் போன்ற தூய்மையும் நுண்மையுள்ளமும் பெற்ற இவளிடம் ஆற்றலும், தகவும் திகழ்ந்து விளங்கின; விழியில் அழகும், அமைதியும், இனிமையும் இனிதே இலங்கின.

தகப்பனான சென்சி தன் மகள் பெட்ரேசை மருவப் பெரிதும் தொல்லை கொடுத்து வந்தான்; பெட்ரேஸ், தன் தந்தையின் கொடுஞ் செயலுக்கு இரையாகாமல் தந்தையின் கொடுமையை ஒழிக்கத தன் சிறிய தாயார் லுக்ரிடியாவிடம் தெரிவிக்கவே, லுக்ரிடியா நஞ்சு கலந்த இனிய பானத்தைக் கொடுத்ததும் சென்சி மயக்கமாய்த் தூங்கிக்கொண்டிருக்கையில் திட்டப்படி ஒலிம்பியாவும் மெரிசோவும் வந்து கழுத்தை நெறித்துக் கொன்றனர். தன்னலமே உருவான போப்புக்கு இச் செய்தி தெரிந்ததும் விசாரணை செய்கையில் தூய்மையும் வாய்மையும் மெய்மையும் உருவான பெட்ரேஸ் எவ்வளவோ வாதாடியும் பலனில்லாமல் போயிற்று; மாண்புடைய பெட்ரேசுக்கு மரணம் தான் பரிசாகக் கிடைத்தது; ஆணவத்தை, அநீதியை, ஒழுக்கமின்மையை வன்மையுடன் எதிர்த்தொழித்த ஒழுக்க அழகி பெட்ரேசுக்கு மண்ணுலகில் மரணம்தான் பரிசாயினும் விண்ணுலகிலே வாழும் உயர் பரிசு பெற்றனள்.

குவலயத்தில் கொடுமையே உருவாகிக் கற்புடையாளைக் கொலை செய்யத் திட்டமிட்ட கொடும்பாவியைக் கற்பரசி கற்பைக் காக்கக் கொலை செய்தால் கற்பரசியைக் கொல்லச் சட்டமிருக்கும் சண்டாள உலகத்தின் சுடுமையை விளக்கினார் போலும். காமத்தின் உச்ச நிலையையும் கற்பின் உச்ச நிலையையும் விளக்கிக் கற்பு தோற்கவும் காமம் வெற்றி பெறவும் உலகச் சட்டம் உதவுகிறதை உரைக்கிறார்.

கனிவுறும் கவியும், உழுவல் நண்பரும், இளமையில் வளமுடைய பொருள் செறிந்த செழுமையுடைய பாக்கள் பல பாடிய கீட்ஸ் தன் காதலி பானி பிரௌனி காதலித்துக் கைவிட்டமையால் கலக்கமுற்று நோய்வாய்ப்பட்டு இன்னுயிரிழந்தமைக்கு ஷெல்லி வருந்தி, வெதும்பி, சிதைந்து, கவலை நிரப்பித் துயராழியில் மூழ்கி மூழ்கி விடுத்த கண்ணீர் அலைகள் 'அடோனி' என்ற தலைப்பு கொண்டு ஆங்கிலச் செய்யுளியல் சொல்லோவியமாகச் சிறந்து விளங்கல் கண்கூடு. பீடுடை பிளாட்டோவின் தத்துவ உரையாடல்கள் சிந்தனைக்கும் அறிவிற்கும் விருந்தளிப்பதைப் போன்று, 'அடோனி' விருந்தாக விளங்குவதுடன் பல புதை பொருளுண்மைகள் மலிந்த வாழ்வியலின் கலைக் கருவூலமாகவும் விளங்குகிறது.

மாண்புடைய விழி இழந்த மில்டன் என்ற பெருங் கவி ஆங்கில இலக்கியத்தைப் பெரிதும் வளமுற வைத்து மறைந்த பின்னர் ஆங்கில இலக்கியம் வறண்ட பாழ் வனமாக இருந்த இழுக்கை அழித்தொழிக்கத் தோன்றிக் கவிக் குழவியாக விளங்கிய கீட்ஸ் மறைந்தமைக்குப் பெரிதும் வருந்துவதாகவும், மேற்கொண்டு மாநிலத்தில் வாழ்ந்திருப்பின் பெருங் கவியாக விளங்கி இருப்பாரென்று கூறித் துயரமே உருவான தாதை துன்ப மேலீட்டான் வளமை இழந்த மலரை உண்மைக் காதல் கண்ணீரால் வளர்க்கையில் அம் மலர் இறந்துபடின் எய்தும் துயரை கீட்சின் மறைவு ஒக்குமெனவும் புலம்புகிறார். புதையுண்ட விடத்து அவர் நிழல் வெண்மை நிறங் கொண்டுழல்வதால் அவர் விழிப்புறுவதில்லை என்றழுது, அவர் மறைவால் அவர் மீதிருக்கும் அன்பும் நம்பிக்கையும் என்றும் மறையாவென்று கூறியதுடன், அவர் பிரிவால் ஏற்பட்ட துக்கமும் மறையாதென்று மொழிந்து மழை பொழிந்து மறையும் மேகம் போன்று இரிந்து விட்டாரா என்று இன்னல் நீர் சொரிகிறார். மாரிக் காலம் வந்து செல்கிறதென்றும், ஆனால் கீட்சின் மரணத்தின் துயர் எக் காலமும் உழன்றுகொண்டிருக்குமென்றும், துயர் என்றும் இறவாமலிருக்கிறதென்றும், ஆதலால் துயரத்திற்கு மரணம் வரவேண்டுமென்றும், உயிரினங்கள் எங்கிருந்து ஏன் வந்தனவென்று வினவிப் பெரியோர்களும் சிறியோர்களும் மரணமுறுகிறார்களென்று உலக நிலையாமையை நன்கு நவின்று மீண்டும் தேர்வுறும் பொருட்டுக் கீட்ஸ் மரண மெய்தவில்லை என்றும், மரணத்திற்கு மரணம் வந்ததென்றும், அவர் இயற்கையில் கலந்து இயற்கையாகவும், இசையாகவும், இடியாகவும், பறவையின் இன்னிசையாகவும் ஒளிர்கிறார் என்றுரைத்து, எல்லாம் மாறினும் மாறாத ஒன்று உளதென்றும்; வானுலக ஒளியானது உலக நிழலைப் பறக்கடிக்கிறதென்றும், ஒளியுடைய தெய்வீக இயலைக் கறைப்படுத்துவது வாழ்க்கை என்றும், ஆதலால் மரணம்தான் கட்டாயம் தேவை என்று உலக வாழ்க்கையைச் சிறிதும் விரும்பாது வெறுத்து விண்ணிலே கீட்சின் உயிர் ஒளிப் பிழம்பாக ஒளிர்கிறதென்றும் புகழ்ந்து பகர்கிறார்.

தோல்வியையும் தொல்லையையும் அவலத்தையும் கண்ட ஷெல்லி உயர உயரப் பறந்து இன்னிசையால் உவகை யூட்டிய

224857

(வானம்பாடி) என்ற பறவையைப் பெரிதும் உவகையுடன் பாடி உவகை யுறுகிறார். கீட்சுக்கு நைட்டிங்கேல் பறவை புகலிடம் நல்கியதைப் போன்று ஷெல்லிக்கு (வானம்பாடி) புகலிடம் நல்கிதுய போலும். அப் பறவையின் இன்னிசைக்கு இரையான ஷெல்லி உலகையு மறந்து உயரப் பறந்து பாடிய பறவையை விண்ணுலக ஒளியுடைய விண் மீனென்று புகழ்ந்துரைத்து, உயரச் சென்றமையால் விழிக்குத் தெரியவில்லை யாயினும் அதன் இன்னொலி செவிக்குப் புலனாகிறதென்றார். மறைக்கப்பட்ட கவியின் கருத்தொளி ஒளிர்வதைப்போன்று தடையின்றித் தகவுடைய பாடல் பாடி உடைந்த உலகுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறதென்றும் கூறித், தகவுடைய தாதையின் உள்ளம் காதல் மேலீட்டான் சோகமுறும் நேரத்தில் இரகசிய இடத்தில் ஆறுதல் கூறுவதையொக்க இப் பறவை பாடுகிறதென்று பகர்ந்து, மக்கள் பாடலில் சோகமும் துயரமும் துக்கமும் மலிந்துள்ளதென்றுரைத்து, ஆனால் வானம்பாடி பாடலில் இனிமையும், பொலிவும், உயர்வும, நூலின்பத்தினும், பேரின்பமும், உள்ளனவென்று மகிழ்ந்து திகழ்ந்தார். தனிமையில் தோய்ந்து உலகியலை வெறுத்துக் கவிகள் பல பாடிய ஷெல்லி மேகத்தையும், காற்றையும், கடலையும் பெரிதும் புகழ்ந்து பாடி இயற்கை இன்பத்தில் தேங்கித் திளைத்தார்.

அருவிகள் ஆறுகளுடன் ஒன்றுவதையும், ஆறுகள் கடலுடன் ஒன்றுவதையும், விண் காற்று உணர்ச்சியுடன் ஒன்றுவதையும், உலகிலுள்ள யாவும் தெய்வீகச் சட்டத்தால் ஒன்றுவதையும் கண்ட இவர், தாம் ஏன் ஒன்றி இருத்தல் கூடாதென்று வினவி மலைகள் வானத்தை முத்தமிடுகின்றனவென்றும், அலைகள் பிணைந்திருக்கின்றனவென்றும், பரிதியொளிப் பாரைப் பற்றியுள்ளதென்றும், மதியொளி மாண்புடைக் கடலை முத்தமிடுகிறதென்றுரைத்தது, தம் காதலி தம்மை முத்தமிடவில்லையானால் அவை யாவும் யாதுக்குப் பயனென்று காதலின் தத்துவத்தை ஷெல்லி விளக்கியதைப் போன்று விளக்கியவர் எவருண்டு இவ்வவனியில்?

அவனியில் அணங்கால் அவலமுற்ற ஷெல்லி துன்ப உச்சியடைந்து துயராழியில் மூழ்கி இன்னற் கரை எய்தி இடியுண்டிடர்ப்பட்டுப 'புன் முறுவல் செய்யும பூ நாளை இறக்கும; நிலைக்குமென்று நினைத்த யாவும் (நம்மை) சோதித்துப் பறந்து விடும்; இவ் வுலக இன்பம் எத் தகைத்து? இருளை எள்ளி நகையாடும் மின்னலின் மிகுந்து ஒளிரும் ஒளியினும் குறுகியது,' என்று மன முடைந்து உலக இன்பத்தின் நிலையாமையை இயம்பி உலகத் தத்துவ ஞானி போல் உலக இலக்கியக் கடலிலே நலமுறும் நற் கற்பனைகளாம் இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற ஆங்கிலத் தங்க ஓடத்திலே தகவுடனமர்ந்து எழுதுகோல் வேந்தி ஒய்யாரமாக உலவுகிறார்.

மேற்புலத்து உயரிய கவிகள் மிகச் சிறுபான்மையராயினும் இவர்களிடம் ஷெல்லி நல்லிடம் பெற்றமை வியப்பன்றோ! ஐரோப்பிய இலக்கியத்தின் உயிரா யிலங்கும் மா பெருங் கவி டாண்டே செய்யுளியலில் சந்தத்தைச் சிறக்க வைத்ததைப் போன் றெவரும் சிறக்க வைத்தார்களில்லை; என்றாலும் டாண்டேயுக்கு இணையாகச் சந்தத்தின் சிறப்பைச்செய்யுளியலில் சிறக்க வைத்த சிறப்புப் பெருமை ஷெல்லி ஒருவருக்கே உண்டு.

'ஐடியலிசத்திலும், முக்கியத்துவத்திலும்,' இசையிலும் இவரை வெல்ல இன்றளவும் எக் கவியும் தோன்றவில்லை. வாழ்வியலை முன்னிறுத்தி இயற்கையைத் துணையாக்கி நலமுறும் நற் கற்பனையால் சிறந்த செய்யுளியற்றி உயர்ந்த உரைநடையில் கட்டுரைகள் பலதீட்டிய ஷெல்லி உயிரைப்பற்றி மிகமிக உருக்க மாக உரைத்ததைப் போன்று எவரும் உரைத்தார்களில்லை.

'இனிய பாடலின் வெள்ளி அலைகளிலே என் உயிர் உறங்குமம. அன்னப் பறவை போன்ற மந்திரப் படகாய் ஓடுகிறது,' என்று கூறிய ஷெல்லி ஒரு நாள் படகிலே மிக மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருக்கையில் திடீரென்று புயல் காற்று தோன்றியதால் படகு கவிழ்ந்தது; சென்றவர்களுள் ஒரு இளைஞன் தப்பிக் கரை யடைந்து மரணச் செய்தியை அறிவித்ததும் பைரனின் வாய் குழறிற்று; கவிகள் யாத்த கவி விபத்தால் இன்னுயி ரிழந்து கரையோரம் சேர்ந்ததும் அவருடைய ஆடையின் பையில் கீட்சின் கவிகள் இருந்தன.

மஞ்சள் நிற மணலில் பரிதியின் பொன் கிரணங்கள் சொரிய நீல நிற அலை மோத ஷெல்லியின் உடலுக்குத் தீயிட்ட னர்; பாக்கள் பாடிய பெருடலை அழல் அணுக அணுக வெண்மை நிற ஒளி ஒளிர்ந்தது; ஓர்ப்புக் குறைவிடமான அவர் மூளை அழலால் குமுபி வெந்ததைக் கண்ட பெருங்கவி பைரன் சிந்தனையால் வெந்தமூளை அழலால்வேகிறது என்று கருதிக் கலக்க முற்றார் போலும். ஷெல்லியின் நெஞ்சம் மிகப் பெரிதாய் இருந்ததுடன் அழலால் எரிக்க முடியவில்லையாதலால அதை அவருடைய உடன் பிறந்தாளுக் கீந்தனர். ஷெல்லியின் சாமபல் உரோம நகருக் கனுப்பப்பட்டுப் 'புராடெஸ்டண்டு' இடு காட்டில் வைக்கப்பட்டது.

பாக்கள் பாடி, கவிகள் வனைந்து, நாடகங்கள் இயற்றிக் கட்டுரைகள் வரைந்து, சீர் திருத்தத்தைச் செப்பி, பண் பாட்டைப் பகர்ந்து, ஒழுக்கத்தை ஒளிர வைத்து, காதலால் கலக்க முற்று, மனைவியால் மன முடைந்து, உலகை வெறுத்து, இயற்கையைத் தழுவிப் புவியில் வாழ்ந்து, புனலில் மூழ்கி, அழலில் கலந்து, காற்றாகி, விண்ணாகி, இறவாப் பெரு நிலை எய்திய, ஷெல்லி வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

(280 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வணிகரும் இருந்தனர்.' அவருள் தெலுங்கு நாட்டினர் பலர். அந் நாட்டில் வாணிகம் செய்து வந்தனர். தெலுங்கு நாட்டில் கோகழி யைஞ் ஞாறு, திரிபுர தளம் மூன்று லக்ஷம் என நாடுகள் பெயர் பெற்று விளங்கின. அந் நாடுகளிலிருந்து வந்து வாணிகம் செய்தோர் தங்களை ஐஞ் ஞாற்றுவர், ஆயிரவர் எனக் கூறிக் கொள்வர். தெலுங்கு நாட்டிலிருந்து வந்து சோணாட்டில் வாணிகம் செய்தோருட் சிலர் தங்களை ஆயிரவர் என்று கூறிக் கொண்டனர். அவருள் கிராஞ்சி மலை கிளிய னின்றான் திருமலை சகஸ்ரன் என்பவன் ஒருவன். கிராஞ்சி மலை யென்பது கிரௌஞ்ச மலை யென்பதன் திரிந்த பெயர். கிழிய நின்றான் என்பது கிளிய நின்றான் எனத் திரிந்து போயிற்று. 'கிளியனூர்' எனத் தொண்டை நாட்டில் ஊர்கள் இருப்பதை நோக்க, இக் கிளியன் என்பது ஓர் இயற் பெயராக இருக்கலா மெனக் கருதுதற்கும் இடந் தருகிறது. கிராஞ்சி மலை இப்போது குண்டூர் மாவட்டத்தில் உள்ளது. குண்டூர் மாவட்டத்துக் குண்டூரின் பழம் பெயர் குமட்டூர் என அவ் வூர்க் கல்வெட்டுக் கூறுகிறது. வடுக நாட்டுக் கிராஞ்சி மலையில் தோன்றிக் கிளிய நின்றான் என்னும் வணிகன் மகனாய்ச் சோணாட்டில் வந்து வாணிகம் செய்த திருமலை, சகஸ்ரம் என்னும் குடியைச் சேர்ந்தவனாவன். சகஸ்ரன், ஆயிரவன் என்னும் பொருள் தருவது.

தெலுங்க நாட்டு வணிகனான திருமலை சகஸ்ரன் சோணாட்டில் வாணிகம் செய்கையில், அருளாளன் சகஸ்ரன் என்ற வேறொருவனும் வந்து வாணிகம் செய்தான். அவனது ஊர் வேத கோமபுரம்; அதனால் அவன் வேத கோமபுரத்து அருளாளன் சகஸரன் என்று வழங்கப் பட்டான். இவனது வேத கோமபுரமும் தெலுங்க நாட்டில் உள்ளதோர் ஊர் இவ் ஊரவர் பலர் சோழ நாட்டில் ஆடுதுறைப் பகுதியில் தங்கியிருந்தனர். அதனால் அப் பகுதி விக்கிரம சோழச் சதுர் வேதி மங்கலத்து வேத கோமபுரம் என்று பெய ரெய்தியிருந்தது (A. R. 366 of-1907). முதல் இராசராசனுடைய அரசியற் சுற்றத்தாருள் 'இராசேந்திர சிம்ம வள நாட்டுக் குறுக்கை நாட்டுக் கடலங்குடி வேத கோமபுரத்துத் தாமோதர பட்டன் என்று ஒருவன் (Ep. Indi XXII, பக் 254 [illegible]
பத்து, பதினோராம் நூற்றாண்டிலேயே வடுக நாட்டு

வணிகர் பலர் தமிழ் நாட்டிற் புகுந்து வாணிகம் செய்தனரென்பதும், வேதியர்கள் கோயில்களிலும் அரசியலிலும் பணிபுரிந்தனரென்பதும் தெரிகின்றன.

பணி மேற்கொண்ட நாட்டவரும் பிறரும் மீண்டும் ஒருங்கு கூடி 'கோவிராச கேசரி வன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு ௩௰௬-வது (முப்பத்தாறாவது) இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு நாட்டோம் திருநலக் குன்றமுடைய மகாதேவர்க்கு இந் நாட்டுப் பிரமதேயம் காப்புக்குடி, கிராஞ்சிமலை கிழிய நின்றான் திருமலை சகஸ்ரனும், வேத கோமபுரத்து அருளாளன் சகஸ்ரனும் இவ் விருவரும் இந் நாட்டில் வந்திறங்கின வெற்றிலைக்குத் தரகு கொண்டு முப்பத்தாறாவது முதல் இத் தேவர் அடைக்கா யமுதுக்கு ஆட்டு (ஆண்டு) முப்பதினாயிரம் பாக்கும் வெற்றிலைக் கட்டு எழுநூற்றைம்பதும் இவ் விருவரும் இவர்கள் வர்க்கத்தாருமே சந்திராதித்தவல் (சந்திராதித்தர் உள்ள வரையில்) இடக் கடவராகவும்......... இது நாட்டோமும் மூன்று படைப் பொற் கோயில் கைக்கோளரும் இந் நாட்டுப் படை பழியிலி ஐஞ் ஞாற்றுவருமே இது நிலை நிறுத்தக் கடவோமாகக் கல் வெட்டுவித்தோம்' (P. S. No. 125) என்று திருநலக் குன்றமுடையார் கோயில் முன் மண்டபத்துக் கீழ்ப் புறச் சுவரில் கல் வெட்டுவித்தனர்.

இவ் வேற்பாட்டின்படி இரண்டாண்டுகள் கழிந்தன. சகஸ்ரர் இருவருக்கும் முன்னர் இருந்த சிறப்புப் பண்டு போல் உண்டாகவில்லை; வருவாயும் குறைந்தது. புதியராய்த் தோன்றிய வணிகருள் சிறுத் தொண்ட நம்பியென்பான், தான் முன்னர் நிகழ்ந்த உடன்படிக்கையில் கலந்து கொள்ளாதது பற்றித் தனக்குள்ளே வருத்தமுற்றான். கைக்கோளர் தலைவரும் பழியிலித் தலைவரும் சொன்னதை ஏற்காது போனது பெருங் குறையாகத் தோன்றிற்று. பின்பு ஒரு நாள் அவர்களைக் கண்டு தன் கருத்தைத் தெரிவித்தான். அவர்கள் நாட்டுத் தலைவர்களுக்குத் தக்க முறையிற் சொல்லிச் சிறுத் தொண்ட நம்பியின் வேண்டுகோளை ஏற்குமாறு செய்தனர். சோழ வேந்தன் ஆணை பெற்று, தானைத் தலைவரும் நாட்டவரும் கூடித் திருமலை சகஸ்ரனையும் அருளாளன் சகஸ்ரனையும் வருவித்து ஆராய்ச்சி செய்தனர். திருநலக் குன்றமுடையார்க்குச் செலுத்த வேண்டுமளவிற் செம் பாகத்தைச் சிறுத்

தொண்ட நம்பி ஏற்றுக் கொள்வது தக்கதெனத் துணிந்தனர். சிறுத் தொண்ட நம்பியும் அதற்கு இசைந்தான். பின்பு, 'முன்பு கல் வெட்டின திருமலையும் அருளாளனும் இவ் விருவரும் செம் பாகமும், தாமோதரன் சீகிருஷ்ணனான சிறுத் தொண்ட நம்பி செம் பாகமும் கொண்டு திருநலக் குன்றத்திலே இருந்து பரிமாறித் திருநலக் குன்றமுடையார்க்கு இப்படியா லுள்ளது செலுத்தக் கடவார்களாக' என முன்பு வெட்டின கல் வெட்டின் கீழே பொறித்தனர்.

இது நிகழ்ந்த சில ஆண்டுகட்குப் பின் வெற்றிலைப் பாக்கின் விலை உயர்ந்தது. அதனால் திருமலை முதலிய தரகர்கட்கு வருவாய் மிகுந்தது. ஆகவே, நாட்டில் முன்னர் நிகழ்ந்தது போன்ற பூசல்கள் உண்டாதற்கேற்ற குறிகள் வணிகரிடத்தே உண்டாயின. நாட்டுத் தலைவர்கள் அவற்றை முன்னறிந்து ஆராய்ந்து தரகு விகிதத்தை உயர்த்தக் கருதினார். அவர் கருத்தறிந்த வேந்தன் முதற் குலோத்துங்கன், தனது ஆட்சியின் ௪௰௮-ஆம் ஆண்டு முதல் (நாற்பத்தெட்டாம் ஆண்டு முதல்) உயர்த்துக் கொள்க என்று ஆணை யிட்டான். மிக்குவரும் வருவாய்க்குச் செலவினமும் கண்டு, நாட்டவர் கூடி, வெற்றிலைத் தரகர் மூவரையும் கூட்டி, 'இக் கல் வெட்டுப்படியுள்ள அடைக்கா யமுதும் இலை யமுதும் இடக் கடவார் திருமெய்ப் பூச்சுக்கு ௪௰௮-வது முதல் திங்கள் ஒன்றுக்கு ஐந்து திராமமாக ஆண்டுக்கு அறுபது திராமம் இறுக்கக் கடவார்களாகக் கல் வெட்டுவித்தோம்' என்று முடிபு செய்து வேந்தற்குத் தெரிவித்தனர். வணிகர் மூவரும் அவ்வாறே செய்து வருவாராயினர். கோனாட்டில் வெற்றிலை வாணிகத்தில் குழப்பமும் கலகமும் இலவாயின.

நிற்க, மேலே கூறிய திருமலை சகஸ்ரனும் அருளாளன் சகஸ்ரனும் கோனாட்டில் இருந்து வாணிகம் செய்து பெருஞ் செல்வத் தலைவர்களாய் விளங்கினர். ஏனை வணிகர் பலரும் இவ் விருவர்க்கும் அடங்கியே இருந்தனர். ஆயினும், பொன்னாசை மக்களைச் சும்மா இருக்கவிடாதன்றோ? திருமலையும் அருளாளனும் ஒருவரின் ஒருவர் மிக்க செல்வம் ஈட்ட விரும்பித் தம்மிற் போட்டியிட்டு மாறுபடுவாராயினர். ஈர் பேனாகிப் பேன் பெருமாளாயிற்றென்பது போல, இம் மாறுபாடு முறுகிப் பெருகிப்

பெரும் பகையாய் முற்றிவிட்டது. இருவரிடையேயும் போரும் பூசல்களும் மிகுந்தன. இருவருடைய படைகள் அடிக்கடி போரிடத் தலைப்பட்டமையின், வாணிகப் போக்கு வரவு ஆறலை கள்வரால் அலைப்புண்டது. இவ்விருவரும் வெற்றிலையும் பாக்கும் கொணர்ந்து வாணிகம் செய்பவர்கள். இவர்களுடைய செயலால் கோனாட்டில் வெற்றிலைப் பாக்கு பஞ்சம் பெரிதாயிற்று. இவர்கள் பால் வெற்றிலை பாக்கு வாங்கி விற்கும் சிறு வணிகர் பெருந் துன்ப முற்றனர். சில காலங்களில் வெற்றிலை பாக்கு கிடைப்பது அரிதாகவே, கோயில் காரியங்களும் முட்டுப்பட்டன. வேறே வணிகர் சென்று வெற்றிலை பாக்குக் கொணர்தற்கு அஞ்சினர்.

சில நாட்களுக்குப் பின் வேற்று நாட்டவர் சிலர் இவர்களால் சீர் குலைந்த வெற்றிலை வாணிகத்தை நடத்தலுற்றனர். கோனாட்டு வணிகருட் சிலர் அவர்கட்குத் துணை செய்தார்கள். வணிகர் பலராகவே அவரவரும் கட்டுப்பாடின்றித் தாந்தாம் வேண்டியவாறே விற்பனை புரிந்தனர். அதனால் கோயிலுக்குச் சேர வேண்டிய தரகும் குறையலுற்றது. அது கண்ட திருநலக்குன்றத்துக் கோயிலதிகாரிகள் புதுவராய்த் தோன்றிய வெற்றிலை வாணிகரை ஊக்கி, வேண்டும் வசதிகளைச் செய்து கொண்டார்கள். சுருங்கச் சொல்வோமாயின் வெற்றிலை பாக்கு வாணிகம் பழைய வடுக வாணிகர் கைவிட்டுப் புதியராய் வந்த வணிகர் கைக்கு மாறிப் போவதாயிற்று. ஆயினும், திருநலக்குன்ற முடையார் கோயிலுக்குரிய வருவாய் செம்மை பெறவில்லை. இதனை எண்ணுவோரும் அருகினர். ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போலக் காப்புக்குடி வெற்றிலை வணிகர் இரண்டு பட்டுக் கலகம் புரிய, அயல் நாட்டு வணிகர்க்கு ஆக்கம் பெருகிற்று. உண்ணாட்டவருக்குச் சலுகை குறைந்தது. திருநலக்குன்றமுடையார் கோயிற்குரிய தரகு வருவாயும் நாட்டவர் வருந்தும் அளவுக்குக் குன்றிப் போயிற்று.

இதற்கிடையே, நாட்டிலுள்ள நல்லோருட் சிலர், கிராஞ்சிமலை கிழிய நின்றான் திருமலை சகஸ்ரனையும் அருளாளன் சகஸ்ரனையும் கண்டு நிகழ்வது முற்றும் நினைவுறக் கூறினர். இருவர் உள்ளமும் உண்மையை ஓர்ந்து கண்டன. சான்றோர் சிலர் கூடி இருவரையும் சந்து செய்வித்தனர்.